Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542





# ரமணோதயம்

ஏப்ரல் 2012
காலாண்டு

ஆராதனை இதழ்
விலை ரூ. 20/

உதயம் 11 | ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய | மலர் 3

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

**ஆராதனை இதழ்**

**ஏப்ரல் 2012**

**ஆசிரியர்:** Dr. S. ராம் மோஹன்

**இணை ஆசிரியர்:** தியாகராஜன்

**ஆலோசகர்கள்:**

**ஏ.வி. சுப்ரமணியன், ஜா. ஜயராமன், சந்திரமௌலி**

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

**ஆண்டுச் சந்தா: ரூ. 75** | **தனி பிரதி: ரூ. 20**

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர் சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்பு அணுகவும்:

குமார் ராஜா: 9444261296

மின்னஞ்சல்: arunamramanam@gmail.com

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:

குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்

41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமணகேந்திரா டிரஸ்ட், சென்னை 4

தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

ஆராதனை இதழ், ஏப்ரல் 2012


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | சிவானந்த லஹரி | அ.வெ. சுகவனேஸ்வரன் | 17 |
| 3 | ரிபுகீதை | தியாகராஜன் | 23 |
| 4 | இலங்கை கண்ட இமயம் நிகர் சித்தர் | இலங்கை சுப்பையா | 28 |
| 5 | இனிவரும் திருநாட்கள் - 2012 | | 32 |
| 6 | மோனத்தின் மகிமை | வி. நிரஞ்சன் | 33 |
| 7 | சிலந்தியாய் வரும் சிவனருள் | Dr.S. ராமகிருஷ்ணன் | 47 |
| 8 | பகவானின் ''ஆன்ம வித்தையை விளக்கும் 'ஆழ் துயிலின்' அரிய தத்துவங்கள்'' | | 54 |
| 9 | அடைக்கலச் சீடனை அணுக விடாமை | குஞ்சு சுவாமிகள் | 63 |
| 10 | சுவர்மறை சோலை | ஜா. ஜயராமன் | 67 |
| 11 | செய்திகள் | | 71 |
| 12 | ரமணோதயம் காப்பு நிதி தொடரும் நன்கொடையாளர்கள் | | 77 |

# ஆசிரியர் உரை

## முடிச்சவிழ்க்கும் முதல்வம்

பகவானின் உபதேசத்தின் வழியில் மிகவும் அடிப்படையானது உள்முக நோக்கம். வெளியே செல்கின்ற மனத்தை உள்நோக்கித் திருப்பி, கூர்த்த மதியுடனும் ஒரு நோக்காக உள்ளே காணில் என்னை அறிவாய் என்று அருணாசலன் உபதேசித்ததாக அக்ஷரமணமாலையில் பகவான் குறிப்பிடுகிறார். நூல்களை ஏணிகளாகக் கொண்டு விசாரமார்க்கத்தில் செல்ல வேண்டும்; 'நான் யார்?' என்ற இடைவிடாத ஆய்வைச் செய்ய வேண்டும். அதைவிடுத்து வெறும் நூற் படிப்பை மட்டுமே கொண்டு சொற்பொழிவு ஆற்றுபவர் ஏணியைச் சுமந்து கொண்டு ஏற வேண்டிய இடத்தில் ஏறாமல் இருப்பவர்கள் போல்வரே ஆவர்.

பல்வேறு புத்தகங்களைப் பயில்வதில் பல்லாண்டு காலங்கள்செலவழிக்கிறோம்.இறுதிக்காலம்வரும்போது இதனால் பயன் ஏதுமில்லையே என்று திகைக்கிறோம். அப்படிப் பல ஆண்டுகள் செலவழிப்பதை விட, மிக்க கவனத்துடன் உள்முகப் பார்வையைச் செலுத்தினால், குருவிடம் சரண் புகுந்தால் உடனே அருள் கிட்டும்.

***சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்***<br>
***கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்***<br>
***பாத்திரம் சிவம் என்று பணிதிரேல்***<br>
***மாத்திரைக்குள் அருளும் மாற்பேரரே.*** ***(5.60.3)***

சாத்திரங்கள் பல கற்று, சாதிப் பெருமைகள் பேசிப் பயன் ஏதுமில்லை. சிவபெருமானைச் சரண் எனப் புகுந்தால் ஒரு கண்ணிமைப் பொழுதுக்குள் வீடு பேறு அடையலாம் என்கிறார் அப்பர் சுவாமிகள்.

உள்முகப் பார்வை எளிதில் வருவதல்ல. ஏன் எனில் நமது புலன்கள் பிறவியிலிருந்தே வெளி நோக்கிச் செல்லப் பழக்கப்பட்டுள்ளன. பார்க்கப் போனால், பிரம்மனே நமது புலன்களை இங்ஙனம் வெளிச் சொல்லுமாறு வேண்டுமென்றே படைத்துள்ளான் என்று கடோபநிடதம் கூறுகின்றது.

**பராஞ்சி கா²னி வ்யத்தருணாத் ஸ்வயம்பூ** (II.i.1)

எப்போதும் புறநோக்கிலேயே பழகிப் போன நமக்கு, உள்முகப் பார்வை என்பதே விளங்காது. நான் என்னுள் இருக்கும் நிரந்தரம் இரண்டையுமே தேடி, இரண்டுமே ஒன்றுதான் என்று தேடிக் கண்டுகொள்ளும் பார்வையே உள்முகப் பார்வை; அந்தப் பார்வைக்கு வைரிகள் ஐம்புலன்கள்; அவற்றிற்கு விட்டுக் கொடுக்காமல், ஒருமைப்பாட்டுடன் உள்முக நோக்கத்தில் ஈடுபடு என்கிறார் பகவான். அந்த உள்முக நோக்கம் பழகி விட்டால் பசுமரத்து ஆணிபோல் அது ஆத்மாவில் பதிந்து விடும். வெளிமுகப் பார்வையோ காற்றில் ஆணி அடிப்பது போன்றது; அது ஆதாரமற்றது. உள்முகப் பார்வையோ ஆத்மாவை அடைந்து அங்கே கலக்கிறது; அப்போது பிறவித்தளை நம்மை விட்டு நீங்குகிறது.

**சாத்திரம் ஓதும் சதிர் தனை விட்டு நீர்**
**மாத்திரைப் பொழுது மறித்துளே நோக்கினால்**
**பார்த்த அப்பார்வை பசுமரத்து ஆணிபோல்**
**ஆர்த்த பிறவி அகல விட்டோடுமே (திருமந்திரம்)**

என்கிறார் திருமூலர். பல நூல்களைக் கற்கும் கல்வியை நாடுவதை விட்டு, நீர் ஒரு மாத்திரைப் போதாவது உங்கள் பார்வையை வெளிநோக்கிச் செல்லாமல் உள்முகமாக்கி உள்ளே நோக்குங்கள். அப்படி நோக்கும்போது பசுமரத்து

*ஆணிபோல் ஆத்மாவில் நிலை பெறும் உங்களைக் கட்டித் துன்புறுத்தும் பிறவிப் பிணி உடனே அகலும் என்கிறது இந்தப் பாடல்.*

*உள்முக நோக்கின் சிறப்பைக் குறித்து தீபதர்சன தத்துவப் பாடலில் பகவானும் குறிப்பிடுகிறார்.*

***இத்தனுவே நானாம் எனுமதியை நீத்துஅப்***
***புத்தி இதயத்தே பொருந்தி அகநோக்கால்***
***அத்துவிதமாம் மெய் அகச்சுடர்காண் கைபூ***
***மத்தியெனும் அண்ணா மலைச்சுடர்காண் மெய்யே***

*பொருள்: பூமியின் இதயத்தானம் என்று சொல்லப் படுகின்ற அண்ணலையின் தீபதர்சன உண்மையாதெனின் இந்தச் சரீரமே நானாகும் என்று, எண்ணும் தேகாத்ம புத்தியை விட்டு, தன்னை உள்ளே தேடும் அகமுக நாட்டத்தால் இதயத்தில் அத்வைதமாக ஒளிர்கின்ற ஆத்ம ஜோதியைத் தரிசிப்பதே தீபதர்சனம் ஆகும்.*

*இந்த உள்முக நாட்டத்தின் மூலம் நாம் நமது இதய ஸ்தானத்தை நாடி அடைந்து அங்கே ஆத்மாவின் ஆனந்த நடனத்தில் ஒன்றுகிறோம். இந்த உள்முக நாட்டமும் பகவான் அருளால் நிகழ்கிறது. அந்த ஆனந்த ஆன்ம நடனம் இடைவிடாது இதயத்தில் நிகழ்கிறது. இந்த அருள் ஒளியை இதயம் முழுதும் நிரம்ப விடாமல் தடுக்க முயல்வது மனம் அல்லது அஹங்காரத்தின் எழுச்சிதான்.*

***சடஉடல் நான்என்னாது சத்சித் உதியாது***
***உடலளவாய் நான்ஒன்று உதிக்கும் – இடையில்இது***
***சித்சடக் கிரந்தி பந்தம் சீவன்நுட்பமெய் அகந்தை***
***இச்சமுசாரம் மனம் எண். (உள்ளது நாற்பது, 24)***

*என இதனை பகவான் உள்ளது நாற்பதில் அடையாளம் காட்டுகிறார். தடுக்கும் இந்த அஹங்காரம், சித்சடக்கிரந்தி பந்தம், நுட்ப மெய், அகந்தை சம்சாரம் எனப் பல பெயர்களால் அழைக்கப்பட்டாலும் அதுவே மனதில் இடையறாச் சலனம் ஏற்படுத்தி, உள்முக நோக்கைத் தடுக்கிறது. மனத்து இயக்கம் தீர்த்தருள் அருணாசலா! என*

நாம் குருவருள் வேண்ட வேண்டும் எனப் பகவான் அறிவுறுத்துகிறார்.

வேதாந்தத்தில் இத்தடைகளை ஆவரண சக்தி விக்ஷேப சக்தி என வகைப் படுத்துகிறார். ஆவரணசக்தி என்பது நம் உண்மையை மறைப்பது விக்ஷேப சக்தி என்பது மனதை அலையச் செய்வது. மாயையின் இரு வெளிப்பாடுகள். இவை ஆவரண சக்தி, நான் (அஹங்காரம்) எனப்படும். தன்முனைப்பின் எழுச்சியாலும் விக்ஷேப சக்தி எனது (மமகாரம்) என்ற ஆசைகளின் எழுச்சியாலும் செயல்படுகின்றது. நாம் முன்பு கண்டபடி,

**நான், தான் என்ற இரண்டும் கெட்டாலின்றி யாவர்க்கும்**
**தோன்றாது சத்தியம் ! *(கந்தர் அலங்காரம், 95)***

என்று இவ்வலைகளைநசிக்கவேண்டியதின்அவசியத்தை அருணகிரிநாதர் குறிப்பிடுகிறார். நான் என்பது நமது உண்மையான தன்மை, எனது என்பது முன்னிலை; படர்க்கைப் பொருட்கள் மீதுள்ள பற்று எவ்வளவுக்கு எவ்வளவு நாம் அன்னிய நாட்டத்தினை அயல் பொருட்கள் மீதுள்ள ஆசையைத் துறக்க முடிகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு நமது உள்முக நாட்டம் வலிமை பெறும். அயல் பொருட்களின் மீதுள்ள பற்றைத் துறப்பதால், விக்ஷேப சக்தியும், மனத்தைத் திருப்பி, தன்மை உணர்வினை ஆழ்ந்து கவனிப்பதால், ஆவரணமும் தற்காலிகமாகத் தடையுறுகின்றன. எனினும் சங்கரர் கூறுவதுபோல், குளத்தின் மூடிய பாசியைக் கையால் ஒதுக்கும் போது, பாசி ஒதுங்கி, தூய நீர் தெரிகிறது. ஆனால் கையை எடுத்த உடனே பாசி மீண்டும் வந்து மூடிக் கொள்கிறது. அது போலவே, உள்முக நாட்டத்தினால் ஒதுங்கியிருந்த ஆவரணம், உள்முக நாட்டம் நீங்கியவுடன் மீண்டும் வந்து ஆத்மாவை மறைக்கிறது. 'திரும்பி அகந்தனை தினமகக்கண் காண்!' தினம் காண் என்று கூறும் தினம் என்னும் சொல் நாளைப் பற்றியதல்ல. இடை அற்ற பயிற்சியையே அது

*குறிப்பிடுகிறது. அந்த இடைவிடாத உள்முக நாட்டத்தினால், மாயை முற்றும் நசிந்து போய், ஆன்மா சதா சர்வகாலமும் நான், நான் எனப் பிரகாசிக்கிறது. இதனையே "நீ, நான் அறப்புலி. நிதங்களி மயமாய் நின்றிடும் நிலையில் நிரந்தரமாய் வாழ்வோம்" என்கிறார் பகவான். உள்முக நாட்டத்தில் உள்ளத்தே ஒளி உண்டாகும்.*

*பன்னிரு திருமுறையில் ஒன்றாகிய திருவிசைப்பாவில் திருமாளிகைத் தேவர் இறையருளால் நம் ஆன்மிக நிலை உயர்வதை மிக அழகாகப் பாடுகிறார்.*

***ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே***
***உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே***
***தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே***
***சித்தத்துள் தித்திக்கும் தேனே***
***அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே***
***அம்பலம் ஆடரங் காக***
***வெளிவளர் தெய்வக் கூத்து உகந்தாயைத்***
***தொண்டனேன் விளம்புமா விளம்பே***

***(திருவிசைப்பா, 1)***

*அறிவாகிய ஒளி மேன்மேலும் வளர்கின்ற தீபம் போன்றவனே! அழிவில்லாத அத்வைதப் பரம்பொருளே! உணர்ச்சி வகைகள் சூழ்ந்த நிலையெல்லாம் கடந்த அனுபவப் பொருளே! தெளிவு வளர்கின்ற பளிங்கினால் ஆனதிரட்சியானஅழகிய மலையே! சித்தத்துள்தித்திக்கின்ற தேனே! அன்பு வளர்கின்ற அடியவர் உள்ளத்தில் பழுத்த ஆனந்தக்கனியே! இதயமாகிய அம்பலத்தை ஆடும் அரங்கமாகக் கொண்டு, வெளிப்பட வளரும் ஆனந்தத் திருநடனத்தை விரும்பி மேற்கொண்ட பகவானாகிய உன்னை, நான்வழிபடும்வழியை எனக்குக்கூறிஅருள்வாய்! இறைவனை ஒளிவளர் விளக்கே என்ற அழகான சொற்றொடரால் திருமாளிகைத் தேவர் அழைக்கிறார். கண் இருந்தும், ஒளி இல்லாவிட்டால் இருட்டறையில்*

பொருளின்தன்மை தெரிவதில்லை. நமக்கு ஞானம் அல்லது வாலறிவு இல்லாமையால் பயனற்ற பொருட்களை சதம் என எண்ணி ஏமாந்து போகிறோம். இருட்டறையில் இருப்பவனுக்கும்கண்ணிருந்தும்பயனில்லை.காண்பதற்கு விளக்கும் தேவை.

நாம் பிறவியிலேயே அஞ்ஞானிகளா? பகவான் கூறுவதுபோல், உண்மையில் எல்லோரும் ஞானிகளே! பின் ஏன் ஆன்மாவை அறியாமல் அலமருகிறோம்? புறக்கண் இருந்தும் அந்தக் கண்ணைப் பயன்படுத்துவதற்கு, இருளை நீக்க ஒரு விளக்கு வேண்டும். அதைப்போல் அகக் கண் இருந்தும், மெய்யைக் காண ஓர் அகவிளக்கு வேண்டும். மாயை இருட்டைப் போக்கி, ஞானக் கண்ணால் பார்க்கும்படி செய்ய இறைவனது அருள் விளக்கு வேண்டும். ஞானக் கண்ணால் பயன் பெறச் செய்யும் ஒளி விளக்காக குருநாதன் உள்ளான். எந்த விளக்கானாலும் எரிபொருள் குறைந்தால், ஒளி குறைந்து விடும். ஆனால் ஞானக் கண்ணைப் பயன் பெற வைக்கும் நிரந்தர ஒளி விளக்காக இறைவன் இருக்கிறான். அது மட்டுமல்ல அவனை உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே என்று அடியார் பாடுகிறார். இறைவன் உணரப்படும் பொருளாகவும் இருக்கிறான். ஆனால் அவனை உணரும் உணர்வு, நமது உலகம் சார்ந்த உணர்வுகள்போல் இந்திரியங்களால் பெறப்படுவது அல்ல. அவன் இந்திரியங்களுக்கு அப்பாற்பட்ட உணர்வாக உள்ளான். அவன் பிறவி நுகர்ச்சிகளின் எல்லையைக் கடந்த அனுபவமாகிய ஆனந்தப் பொருள் என்பதைத் தெளிய வைக்கிறது. அவனுக்குத் தனியே இன்னதென்று சுட்டிக் காட்டும் உருவம் ஒன்றும் இல்லை. ஆனாலும் பக்தர்களின் இயல்புக்கு ஏற்ற வடிவில் அவன் வருகிறான். உண்மையில் அவன் தூய்மையான நிறமற்ற பளிங்கு போன்றவன். தன் முன் நிற்பவன் எப்படி இருக்கிறானோ, அதனையே பளிங்கு காட்டும். அது போன்றே இறைவனும் அடியாரின் விருப்பத்திற்கு

ஏற்றபடி அருள் தருவான். தனக்கென்று தனி குணமோ, குறியோ இல்லாவிடினும் அன்பினாலே தன்னை அணுகுகிறவர் உள்ளத்திற்குத் தக்கபடி அருள் பாலிப்பதால் 'தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே' எனக் குறிப்பிடுகிறார். கனிந்த அன்பர் இதயந்தன்னையே தனது அரங்கமாகக் கொண்டு அருளுபவன் நம் குருநாதன்.

பகவானால் அடிக்கடி சுட்டிக் காட்டப்படும் நம்மாழ்வார் பற்றிய நிகழ்வு நினைவுக்கு வருகிறது. இறைவனை எஜமானனாகவும் காதலனாகவும் கண்டு உண்ணும் சோறு, பருகு நீர், தின்னும் வெற்றிலை யெல்லாம் எம்பெருமானாக உணர்ந்து பாடிய நம்மாழ்வார் தனது ஆன்மிகப் பரிமாணத்தின் இறுதியிலே இத்தனையும் வெறும் பாழே ஓ! என்று அதிசயிக்கிறார். நம்மாழ்வாரின் க்ஷேத்திரமாகிய திருப்புளிங்குடியில் ஆண்டுதோறும் நடைபெறும் விழாவில் ஒரு மிக விசேஷமான நிகழ்வு ஒன்று உள்ளது. வழக்கமாக பகவானைத் தரிசிக்க வேண்டிதான் பக்தர்கள் செல்வார்கள். இதற்கு மாறாக நம்மாழ்வார் திருநட்சத்திரத்தன்று நம்மாழ்வாரைத் தரிசிக்க அவ்வூரைச் சுற்றியுள்ள நவதிருப்பதிகள் எனப்படும் ஒன்பது வைணவத் தலங்களிலிருந்தும் பெருமாள் உற்சவமூர்த்தியாகப் புறப்பட்டு ஆழ்வார் திருநகர் எனப்படும் திருப்புளியங்குடிக்கு வருகிறார்கள். அந்த ஒன்பது இறைவர்கட்கு முன்னிலையில் ஆழ்வார் விக்கிரகத்தின் மீது இருபத்து நான்கு பட்டாடைகள் போர்த்தப்படும். பின் அவை ஒவ்வொன்றாக எடுக்கப்பட்டு, 24ஆவது போர்வையும் நீங்கிய பின்னர், ஆழ்வார் பரமநிர்வாண நிலையில் தரிசனம் தருகிறார். அப்போது, அவருக்கு ஜோதியாக தீபாராதனை காட்டப்படும். பின்னர் மீண்டும் வஸ்திரம் அணிவிப்பர்.

இந்த நிகழ்ச்சியில் ஒரு மிகப் பெரிய தத்துவம் அடங்கியுள்ளது. நமது சனாதனத் தத்துவப்படி இந்த அகிலம் முழுவதும் ப்ரகிருதி எனப்படும் இருபத்துநான்கு

தத்துவங்களால் ஆனது. இந்த அகிலம் உயிர் பெறுகிறது. பின்னர் அது அந்தப் பரமாத்மாவிலேயே ஒடுங்குகிறது. இந்த இருபத்துநான்கு போர்வைகளும் ப்ரகிருதியின் இருபத்து நான்கு தத்துவங்களைக் குறிக்கின்றன. அவை ஒவ்வொன்றாக நீங்கி இறுதியில் பரமாத்மா மட்டுமே பிரகாசிக்கிறது. அதுவே அவனது ஜோதியுரு. உள்முக நோக்கம் பயிலப் பயில ஐந்து கோசங்களையும் கடந்து ஆத்மாவைத் தரிசிக்கிறோம்.

போர்வைகள் உடலை மறைப்பதுபோல அகந்தையின் பாற்பட்ட உபாதிகள், நமது உண்மையான பரமாத்ம நிலையை மூடி மறைக்கின்றன. நாம் நமது உண்மையான தன்னிருப்பு நிலையை அறிய வேண்டுமானால் இந்த ஆடைகளாகிய உபாதிகள் நீக்கப்பட வேண்டும். சத்குருவின் அருளால் மட்டுமே இந்த உபாதிகள் நீங்கப் பெறும்.

**ஞானவானாம் ஆன்மநாதன் அருட் பேறாய**
**மோன ஆனந்தம் முழுதெய்த - மானம்**
**தருகோசம் ஐந்தும் தணத்தலே சீவ**
**நிர்வாணம் என்னும் நிலை!**

என பகவான் உபதேச குருவாசகக் கோவை 442-ஆம் பாடலில் குறிப்பிடுகிறார்.

(ஞானவான் - சிதாகாசம், ஐந்து கோசம் - அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம்; தணத்தல் - நீக்குதல்)

ஜீவாத்மாவாகிய நாயகி சிதாகாச வடிவமாகிய இறைவனின் அருளாகிய பேரானந்தத்தை முழுதும் பெற்று, அனுபூதி அடைய வேண்டுமெனில் ஐந்து கோசவடிவில் போர்த்தியுள்ள தேஹாபிமானத்தைக் களைந்து ஏதுமற்ற நிலையை எய்த வேண்டும். அப்போது சிவபோதமாகிய அருள் ஆடை நம்மை வந்து போர்த்திக் கொள்ளும். இதனையே,

***சீரை அழித்து நிர்வாணமாச் செய்தருள்***
***சீரை அளித்தருள் அருணாசலா!***

*என பகவான் அக்ஷரமணமாலை 30-ஆவது பாடலில் குறிப்பிடுகிறார். சீரை அழித்து என்ற பதம், நாம் பெருமிதமாகக் கருதிக் கொள்ளும் குலம், செல்வம், கற்றறிவு, பந்த பாசங்கள், புகழ் போன்று பல்வேறு வெளிச் சிறப்புகளைக் குறிப்பிடுகிறது. இவை அனைத்துமே அகந்தையின் பாற்பட்டு, பின் ஒரு நாள் அழியக்கூடியவை.*

*மற்றும் சீரை என்ற சொல் ஆடை என்ற பொருளில் கொண்டால், நமது ஆன்மாவை மறைக்கும் ஐந்து கோசங்களைக் குறிப்பிடும். சீரை என்ற சொல்லுக்கு இந்த இரண்டு பொருளில் எதை எடுத்துக் கொண்டாலும், சீரை அழித்தல் என்பது, தேகத்துடனும், உபாதிகளுடன் கொண்ட அகந்தையின் பாற்பட்ட அபிமானத்தை அழித்தல் என்றே பொருள்படும். இந்த ஜீவ போதம் அழிந்த நிலையே நிர்வாணம் எனப்படும். இந்நிலையே சருவ நிர்வாணப் பதம் என்று தேவிகாலோத்தரம் பாடலில் பகவான் குறிப்பிடுகிறார்.*

*இப்படி ஜீவபோதம் அழிந்து சிவபோதம் மட்டுமே தனித்து ஜோதியாய் இலங்குகின்ற தன்மையை மணிவாசகர் குறிப்பிடுகிறார்.*

***கயல் மாண்ட கண்ணி தன் பங்கன் எனைக் கலந்து ஆண்டலுமே***
***அயல் மாண்டு அருவினைச் சுற்றமும் மாண்டு, அவனியின் மேல்***
***மயல் மாண்டு மற்று உள்ள வாசகம் மாண்டு என்னுடைய***
***செயல் மாண்டவா பாடி தெள்ளேணம் கொட்டோமோ!***

***(கயல் மாண்ட கண்ணி - மீனாட்சி; அவனி-பூமி)***

*இங்ஙனம் இறையருள் வந்து அகங்காரம் அழிவதை நம்மாழ்வாரும் அழகாகக் குறிப்பிடுகிறார்.*

***தானேயாகி நிறைந்து எல்லா***
***உலகும் உயிரும் தானேயாய்***
***தானேயான் என்பானாகித்***
***தன்னைத்தானே துதித்து எனக்குத்***

**தேனே பாலே கன்னலே**
**அமுதே திருமால்இருஞ்சோலை**
**கோனேயாகி நின்றொழிந்தான்**
**என்னை முற்றும் உயிருண்டே!**

*தத்துவமஸி என்ற மஹா வாக்யத்திலும், தானே தானே தத்துவம் என்ற பாகவான் வாய் மொழியிலும் கூறப்பட்ட உண்மையை நம்மாழ்வார் அழகுற விளக்குகிறார். அத்வைத நிலையில் பக்தன், கடவுள் என்ற வேறுபாடே முற்றிலும் ஒழிந்து, தன்னைத் தானே துதித்து, என்ற பரபக்தி நிலையை சாதகன் அடைவதை விளக்கும் அழகிய பாடல் இது. உண்மைப் பொருளாகிய தான் என்பதை மறைத்து நம் புறவுலகு செலுத்தும் இந்த நூலறிவு பெற்று ஆய்வதில் பயன் எதுவுமில்லை. இது சஞ்சயனக் குப்பையில் எலும்பு பொறுக்குவதை ஒக்கும்! எனப் பகவான் காரமாகக் கூறுகிறார். அனாவசிய ஆய்வுகளைப் புறகணித்து ஆன்ம விசாரணையில் தீவிரமாக ஈடுபடு என்கிறார் பகவான்.*

*ஆத்மா ஒன்றே உள்ள பொருள் என்றால் இத்தகைய போலித் தத்துவங்கள் எங்ஙனம் உதிக்கின்றன இதற்கு பகவானே அருணாசல அஷ்டகத்தின் ஆறாவது பாடலில் விடை கூறுகிறார். ஒரே ஒரு பொருள்தான் உள்ளது அதுவே ஆத்மா. அதுவே சத்தியம். அதுவே அறிவு. அதுவே ஆனந்தம். அதுவே அருணாசலம். அதுவே ரமணன். அந்த உள்ள பொருளின் ஒரு வெளிப்பாடாக, அதனின்று*

*வேறுபடாதஓர்அதிசயசக்திஉள்ளது.அச்சக்தியிலிருந்து நுட்பமான நிழல் போன்ற நினைவுகள் எழுகின்றன. பரம்பொருளின் பிரதி பலிப்பான அந்த நினைவகளின் கூட்டமே மனம் எனப்படுகிறது. கர்ம நினைவுகளின் பதிவுகளால் தூண்டப்பட்ட நினைவுகள், நுட்பமான உலகப் படத்தொடர்களாக விரிவடைந்து ஐம்புலன்கள் வழியே புறவுலகில் நாமமும் ஜபமும் கொண்ட உலகத்*

தோற்றங்களாக வெளிப்பட்டு உருக்கொள்கின்றன. இங்ஙனம், உலகத் தோற்றங்களாக எழுந்துள்ள எல்லா வகைத் தத்துவங்ளும் உள்ளத்திலிருந்து எழுகின்ற நிழலை ஒத்த நினைவுகளின் விரிவுகளே, அவற்றிற்குத் தனிப்பட்ட இருப்பு வேறு எதுவும் இல்லை. சினிமாத் திரை எப்படி தன் மீது தோன்றுகின்ற படங்களால் பாதிக்கப்படாதோ, அது போன்றே உள்ளபொருளாகிய ஆத்மா, அகந்தையினால் உந்தப் பெற்று எழும் எந்தப் பொய்த் தோற்றத்தாலும் பாதிக்கப்படாது,

தன்னை அறிதலே தலை சிறந்த தத்துவம் -

**தன்னை அறிதலின்றிப் பின்னை எதறிகிலென்**
**தன்னை அறிந்திடின்பின் என்னை உளது அறிய**
**(ஆன்ம வித்தைக் கீர்த்தனம்)**

இந்தத் தன்னை அறிதற்கு சொந்த முயற்சியால் முடியாது. ஆயினும் இதற்கு முதல் தேவை சிரத்தையும், அடக்கமும். இத்தகைய குணங்கள் பொருந்திய சாதகனுக்கு வழிகாட்டுவதற்காக பரம்பொருளே வெளியே சத்குருவாகத் தோன்றி அவன் மனத்தை இதயத்தை நோக்கித் திருப்பிச் செலுத்துகிறார். அந்தப் பரம்பொருளே இதயத்தினுள் எப்போதும் ஒளிரும் ஆன்மாவாகிய உள் குருவாகி மனத்தை உள்நோக்கி இழுத்து, தன்னுள் ஒடுங்கச் செய்கிறது. 'தானே காட்டுவாய் அருணாசலா!' என பகவான் இதனைச் சுட்டுகிறார். கடோபநிடதமும் இப்பேருண்மையை ஆத்மா சாதகனைத் தேர்ந்து எடுத்து, தானே அவனை வரிக்கின்றது என்று கூறுகிறது (ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்).

நாம் முன்பே கண்டபடி மாயை இருவேறு விதமான சக்திகளாகச் செயல்பட்டு நம்மை, நம் உள்ள இருப்பினின்றும் நழுவச் செய்கிறது. ஒன்று ஆவரண சக்தி, மற்றொன்று விக்ஷேப சக்தி. ஆவரணம் எனப்படும் மறைப்பு சக்தி, நினைவு-கனவு-ஆழ்ந்த உறக்கம் என்ற மூன்று நிலைகளிலும் செயல்பட்டு, நமது உண்மையான

ஆத்ம பிரகாசத்தை மறைக்கின்றது. விக்ஷேப சக்தி என்னும் பொய்யுரு காட்டும் சக்தி கனவிலும், விழிப்பிலும் செயல்பட்டு நாம் அல்லாது நானாவித வெளித் தோற்றங்களை மனத் திரையில் காட்டி நமது உண்மை உணர்வை மறக்கச் செய்கிறது. ஸத்குருவின் அருள் இரு வேறுவிதமாகச் செயல்பட்டு, இச்சக்திகளை அழிப்பதை பகவான் விளக்குகிறார். புறத்தை நாடி ஓடிக் கொண்டிருக்கும் மனத்தை உள்நோக்கித் திருப்பி நான்-நான் என ஸ்புரிக்கும் உள்பொருளை நாடி ஆன்மாவில் மூழ்கி ஐக்கியமாவதே சாதனையின் பூர்த்தி நிலை. மனம் தன் முயற்சியால் உள்நோக்கித் திரும்பும் போது, ஒரு நிலையை அடையும்வரை மட்டுமே முயற்சியால் முடியும். அருணாசலன் உள்ளத்தில் நான்-நான் என்று ஸ்புரித்து, தானே தானே தத்துவம், அதைத் தானே காட்டும் போது தன் மனம் பூரணத் தெளிவை அடைந்து ஆன்மாவில் கிடைக்கிறது. அப்போதுதான் சித்-சடக்-கிரந்தி என்னும் மாயை முடிச்சு முற்றிலும் அறுபடுகிறது.

இக்கிரந்தி பேதத்தை அக்ஷரமணமாலை 27-ஆவது பாடலிலும், 29-ஆவது பாடலிலும் பகவான் விளக்குகிறார்.


***சகலமும் விழுங்கும் கதிர் ஒளி இனமன***
***சலசம் அலர்த்தியிடு அருணாசலா!***

***(அக்ஷரமணமாலை 27)***

ஆவரண சக்தியினால் ஏற்பட்ட அஞ்ஞான இருளைப் போக்கும் சூரியனாக வந்து சத்குருவாம் அருணாசலன் கிரந்தி பேதம் செய்கிறான். அதே சமயம், விக்ஷேப சக்தியின் காரணமாக ஏற்படும் பல்வேறு வெளித் தோற்றங்களால் ஆசை உண்டாகிறது. அந்த ஆசை வெப்பம் ஆகிறது. இந்த ஆசைத் தீயின் வெப்பத்தை நீக்கி, விக்ஷேப சக்தியை அழிக்கும் குளிர்ந்த கிரணங்கள் கொண்ட சந்திரனாக 29-ஆம் பாடலில் பகவான் அருணாசலத்தை உருவகிக்கிறார்.

***சித்தக் குளிர அத்தம் வைத்து அமுத***
***வாயைத் திற அருள்மதி அருணாசலா!***

***(அக்ஷரமணமாலை 29)***



உள்முக நாட்டத்தினால் ஸத்குருவை இதயத்துள் நாடும் சாதகர் மனத்தில் ஒளியும், குளிர்ச்சியும் பொருந்திய ஞான ஒளியாகிய அருணாசலனின் இதயத்தில் ஸ்புரித்து சித்-சடக் கிரந்தி முடிச்சை நீக்கி அழிக்கிறான். சித்தம் உள்முகப் பட்டு அசைவின்றி நிற்கும் போதுதான், நான்-நான் என்று விளக்கு வடிவில் உள்ளத்தில் சதா நிகழ்ந்து வரும் மௌன உபதேசத்தை உணர்கிறான். இதுவே ஆத்ம சாதனையின் இறுதி நிலை.

இந்த பேதம் - முடிச்சு அவிழ்த்தல் கண்டோம் முடிச்சவிழ்த்தல் என்பது திருட்டுக்கு வேறு சொல்லாகத் தமிழில் பயன்பட்டு வருவது. இறைவனே நம்மை அன்பால் கட்டும் திருடன்தானே, தஸ்கராணாம் பதி - திருடர் தலைவன் என்று வேதத்தில் குறிப்பிடப்படும்

அவன், உள்ளம் கவர் கள்வன் என ஞான சம்பந்தரால் அழைக்கப்படுகிறான். இறைவன் திருக்குமாரரான விநாயகர் நிகழ்த்திய திருட்டு, தமிழ் இலக்கியத்தில் அழியா இடம் பெற்ற பாடலாகக் குறிப்பிடப்படுகிறது.

இரட்டைப் புலவர்கள் என்னும் முடவர்-குருடர் ஆகிய இரு தமிழ்ப் புலவர்கள், ஓர் ஊரில் சென்று கவிபாடி வெகுமானங்களையும், உணவுப் பொருட்களையும் பெற்று வந்தனர். ஊர்க்கோடியில் உள்ள பிள்ளையார் முன் வைத்தனர். சுற்று வட்டாரத்தில் யாருமே கண்ணில் படாததால் மூட்டை பத்திரமாக இருக்கும் என்று எண்ணி குளத்தில் குளிக்கச் சென்றனர். திரும்பி வந்து பார்த்தால், மூட்டை அவிழ்ந்து கிடக்கிறது உள்ளே ஒன்றுமே இல்லை. யாரும் அங்கு வந்த தடயமும் இல்லாததால், இந்தப் பிள்ளையார்தான் இந்தத் திருட்டு வேலையைச் செய்துள்ளார் என்று அறிந்து ஒரு அங்கதப் பாடல் பாடினர்.

**தம்பியோ பெண்திருடி - அன்னையுடன் பிறந்த**
**வம்பனோ நெய் திருடும் மாமாயன் - அம்புவியில்**
**மூத்த பிள்ளையாரே! நீரோ முடிச்சவிழ்த்தீர் - போமோநும்**
**கோத்திரத்திற்குள்ள குணம்.**

ஓய் பிள்ளையாரே! உமது பரம்பரையிலேயே திருட்டுக் குணம் உள்ளது. உமது தம்பி முருகன் வள்ளியைத் திருட்டுதனமாக மணந்து கொண்டான். உமது மாமாவாகிய பெருமாளோ, கண்ணனாக வந்து எல்லார் வீட்டிலும் வெண்ணையைத் திருடினான். நீரோ, இங்கே வந்து எமது மூட்டையின் முடிச்சு அவிழ்த்து திருடி உள்ளீர். உமது கோத்திரத்திலுள்ள குணம் உம்மை விட்டுப் போகுமா? எனப் பாடினர். உடனே மூட்டையில் பல பரிசுகளும், உணவும் வந்து சேர்ந்து பெரிய வெகுமான மாகப் பிள்ளையாரால் அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

மீண்டும் பரிமாறலைத் தொடர்வோம்!

பகவான் பணியில் தங்கள்,

**ராம் மோஹன்**

# சிவானந்த லஹரி

## அ.வெ. சுகவனேஸ்வரன்

***(51)***

***ப்4ரு2ங்கீ3ச்சா2-நடனோத்கட: கரி-மத3-க்3ராஹீ ஸ்பு2ரன்-***
***மாத4வாஹ்லாதோ3 நாத3-யுதோ மஹாஸித-வபு:***
***பஞ்சேஷுணா சாத்3ரு2த: ।***
***ஸத்பக்ஷஸ்ஸுமனோ-வனேஷு ஸ புன: ஸாக்ஷான்மதீ3யே***
***மனோ***
***ராஜீவே ப்4ரமராதி4போ விஹரதாம் ஸ்ரீசை1ல-வாஸீ விபு4: ॥***

ப்ருங்கி எனும் ரிஷியினது விருப்பத்தை நிறைவேற்ற நடனத்தை மேற்கொண்டவரும், கஜாஸுரனது மதத்தை ஒடுக்கியவரும், மோஹினி உருவெடுத்த விஷ்ணுவின் வடிவத்தில் மகிழ்ச்சியடைந்தவரும், ப்ரணவ ரூபியும், மிகவும் வெளுத்து விளங்கும் சரீரமுடையவரும், மன்மதனது பாணங்களுக்கு இலக்கானவரும், விண்ணோர்களைக் காக்க ஆவலுள்ளவரும், எங்கும் நிறைந்தவரும், ஸ்ரீசைலத்தில் ப்ரமராம்பிகையைத் துணைவியாகக் கொண்டு கோயில் கொண்டிருப்பவ ருமான மல்லிகார்ஜுனர் பிரத்யக்ஷமாக எனது மனதாகிய தாமரையில் விளையாடட்டும்.

சிலேடையாக இன்னொரு பொருள்:

பெண் வண்டின் இச்சைக்கேற்பச் சுற்றுவதில் விருப்பமுள்ளதும், யானையின் மதநீரைப் பருகுவதும், பிரகாசிக்கும் வஸந்த ரிதுவில் மகிழ்வதும், ரீங்காரத்துடன் கூடியதும், மிகக் கரிய உடலுடையதும், மன்மதனால்

(அவனதுகரும்புவில்லுக்குநாணாக)ஆதரிக்கப்பட்டதும், பூந்தோட்டங்களில் மிக்க ஆசைகொண்டதும், அழகு நிறைந்த மலையில் வசிப்பதும், எங்கும் செல்கிறதுமாகிய இந்த அரச வண்டு மீள மீள நேராக என் மனத்தாமரையில் விளையாடுமாக!

**(52)**

***காருண்யாம்ரு2த-வர்ஷிணம் க4ன-விபத்3-க்3ரீஷ்மச்சி2தா3-***
***கர்மட2ம்***
***வித்3யா-ஸஸ்ய-ப2லோத3யாய ஸுமனஸ்ஸம்ஸேவ்யம்***
***இச்சா2க்ரு2திம் ।***
***ந்ரு2த்யத்3ப4க்த-மயூரம் அத்3ரி-நிலயம் சஞ்சஜ்ஜடா மண்ட3லம்***
***ஸ1ம்போ4 வாஞ்ச2தி நீல-கந்த4ர ஸதா3 த்வாம் மே***
***மனஸ்1சாதக: ॥***

நீலகண்டரே! நீங்கள் கருணையென்ற அமுதத்தைப் பொழிபவர், தாபங்களாகிய கோடையில் பக்தர்களைக் குளிரவைப்பவர், வித்தையென்னும் பயிர்களின் விளைச்சலையளிக்கும் பொருட்டுத் தூய்மையுள்ளத்தவர் களால் போற்றப்படுபவர்,

விரும்பிய உருவமெடுப்பவர், ஆனந்த நடனம் புரியும் பக்தர்களாகிய மயில்களை உடையவர், மலையில் வசிப்பவர், அசைந்தாடும் சடைகளாகிற மின்னலை உடையவர், உங்களை எனது மனதாகிய சாதகப்பறவை இடைவிடாது காண ஆவலுடன் விரும்பி நிற்கிறது. (இங்கே சிவபெருமான் மேகத்தோடு உவமிக்கப் படுகிறார்).

**(53)**

***ஆகாஸே1ன ஸி1கீ2 ஸமஸ்த ப2ணினாம் நேத்ரா கலாபீ***
***நதாऽனுக்3ராஹி ப்ரணவோபதே3ஸ1 நினதை3: கேகீதி யோ***
***கீ3யதே ।***
***ஸ்1யாமாம் ஸை1ல ஸமுத்3ப4வாம் க4ன-ருசிம் த்3ரு2ஷ்ட்வா***
***நடந்தம் முதா3***

***வேதா$^{3}$ந்தோபவனே விஹார-ரஸிகம் தம் நீல-கண்ட$^{2}$ம் ப$^{4}$ஜே ||***

*கருத்த கழுத்தையுடைய மயில் போன்ற நீலகண்டனைச் சரணமடைகிறேன். (நீலகண்டம் என்பது மயிலுக்கும் பெயராகும், ஆலகால நெஞ்சரான சிவனுக்கும் பெயராகும்). இம்மயிலுக்கு ஆகாயமே கொண்டை, பாம்புத்தலைவனான ஆதிசேஷன் கண்ணுள்ள தோகை, தன்னை அடைக்கலம் புகுந்தவர்களுக்குச் செய்யும் ப்ரணவ உபதேசமே 'கேகா' என்னும் மயிலின் குரல் ஒலி. மலைமகள் என்னும் மேகத்தைக் கண்டு மகிழ்ச்சி கொண்டு நடனம் புரிந்து, வேதாந்தம் என்ற தோட்டத்தில் ரசித்து விளையாடுவது இம்மயில்.*

***(54)***

***ஸந்த்$^{4}$யா க$^{4}$ர்ம-தி$^{3}$னாத்யயோ ஹரி-கராகா$^{4}$த-ப்ரபூ$^{4}$தானக-த்$^{4}$வானோ வாரித$^{3}$ க$^{3}$ர்ஜிதம் தி$^{3}$விஷதா$^{3}$ம் த்$^{3}$ரு$^{2}$ஷ்டிச்ச$^{2}$டா சஞ்சலா |***

***ப$^{4}$க்தானாம் பரிதோஷ பா$^{3}$ஷ்ப விததிர்வ்ரு$^{2}$ஷ்டிர்மயூரீ ஸி$^{1}$வா***

***யஸ்மின்னுஜ்ஜ்வல தாண்ட$^{3}$வம் விஜயதே தம் நீல-கண்ட$^{2}$ம் ப$^{4}$ஜே ||***

*இந்தச் சிவன் என்ற மயில், மாலை நேரத்தை மாரிக்காலமாகவும், மஹா விஷ்ணுவின் மிருதங்க ஒலியை மேகத்தின் கர்ஜனையாகவும், தேவர்களது கண்ணோக்குகளை மின்னலாகவும், அடியார்களது ஆனந்தக் கண்ணீரை மழையாகவும், பார்வதியைப் பெண் மயிலாகவும் கொண்டு பிரகாசமாகத் தாண்டவமாடி மகிழ்கிறது. இப்படிப்பட்ட நீலகண்டமயிலை நான் ஸேவிக்கிறேன்.*

***(55)***

***ஆத்$^{3}$யாயாமித தேஜஸே ஸ்$^{1}$ருதி பதை$^{3}$ர்வேத்$^{3}$யாய ஸாத்$^{4}$யாய தே***

***வித்3யானந்த3-மயாத்மனே த்ரி-ஜக3தஸ்ஸம்ரக்ஷணோத்3***
***யோகி3னே ।***
***த்4யேயாயாகி2ல யோகி3பி4ஸ்ஸுர-க3ணைர்கே3யாய***
***மாயாவினே***
***ஸம்யக் தாண்ட3வ ஸம்ப்4ரமாய ஜடினே ஸேயம்***
***நதிஸ்1ஸ1ம்ப4வே ॥***

*அனைத்திற்கும் ஆதியும், அளவு கடந்த ஜோதியும், மறைகளால் அறியப்படுபவரும், ஸாத்யமெனும் லக்ஷ்ய வஸ்துவும், பேரறிவு பேரானந்த உருவினரும், மூவுலகத்தைக் காப்பதில் உறுதிகொண்டவரும், ஸதா யோகிகளால் தியானிக்கப்படுவரும், தேவர்களால் பாடப் படுபவரும், மாயையை வயப்படுத்தியவரும், விரித்த சடையுடன் தாண்டவமாடி மங்களத்தை அளிப்பவருமான சம்புவான உமக்கு இந்த வணக்கமுரித்தாகுக.*

***(56)***

***நித்யாய த்ரிகு3ணாத்மனே புர-ஜிதே காத்யாயனீ ஸ்1ரேயஸே***
***ஸத்யாயாதி3 குடும்பி3னே முனி-மன: ப்ரத்யக்ஷ***
***சின்மூர்தயே ।***
***மாயா ஸ்ரு2ஷ்ட ஜக3த்த்ரயாய ஸகலாம்னாயாந்த***
***ஸஞ்சாரிணே***
***ஸாயம் தாண்ட3வ ஸம்ப்4ரமாய ஜடினே ஸேயம்***
***நதிஸ்1ஸ1ம்ப4வே ॥***

*நித்ய வஸ்துவாயும், முக்குணவடிவம் கொண்டவ ராயும், முப்புரத்தை வென்றவராயும், பார்வதியினது பெரும் பேறானவராகவும், ஸத்தியராயும், முனிவர்களுள் ளத்தே பிரத்யக்ஷமாக விளங்கும் ஞானமூர்த்தியும், மாயையைக் கொண்டு மூவுலகத்தையும் தோன்றச் செய்பவராயும், வேதங்களின் உட்கருத்தென விளங்கிக் கொண்டிருப்பவராகவும், மாலை நேரத்தே விரித்த சடையுடன் தாண்டவத்தை மேற்கொள்பவராகவுமுள்ள சம்புவுக்கு இந்த வணக்கம் உரித்தாகுக.*

***(57)***

***நித்யம் ஸ்வோத$^{3}$ர போஷணாய ஸகலானுத்$^{3}$தி$^{3}$ஸ்$^{1}$ய***
***வித்தாஸ$^{1}$யா***
***வ்யர்த$^{2}$ம் பர்யடனம் கரோமி ப$^{4}$வதஸ்ஸேவாம் ந ஜானே***
***விபோ$^{4}$ ।***
***மஜ்ஜன்மாந்தர புண்ய-பாக ப$^{3}$லதஸ்த்வம் ஸ$^{1}$ர்வ***
***ஸர்வாந்தர:-***
***திஷ்ட$^{2}$ஸ்யேவ ஹி தேன வா பஸு$^{1}$-பதே தே***
***ரக்ஷணீயோ=ஸ்ம்யஹம் ॥***

*அடியார்களது பாவத்தைப் போக்குவதால் 'சர்வர்' எனப்படுபவரே! எங்கும் நிறைந்த விபுவே! எனது வயிற்றை வளர்க்கவே செல்வத்திலாசை கொண்டு பலரையும் நாடி வீணாக அலைகின்றேன், (இது வரை) உன் சேவையை அறிந்தேனில்லை. இப்பொழுதுதான் என் முற்பிறவிகளில் செய்த புண்ணியம் பழுத்துப் பலன் தந்த அனைத்துள்ளும் உறைபவராக உம்மையறிந்தேன். ஆகவே, உம்மால் காப்பாற்ற பட வேண்டியவனாகிறேன்.*

***(58)***

***ஏகோ வாரிஜ பா$^{3}$ந்த$^{4}$வ: க்ஷிதி-நபோ$^{4}$ வ்யாப்தம் தமோ-***
***மண்ட$^{3}$லம்***
***பி$^{4}$த்வா லோசன-கோ$^{3}$சரோபி ப$^{4}$வதி த்வம் கோடி-***
***ஸூர்ய ப்ரப$^{4}$: ।***
***வேத்$^{3}$ய: கிம் ந ப$^{4}$வஸ்யஹோ க$^{4}$ன-தரம் கீத்$^{3}$ரு$^{2}$ங்-***
***ப$^{4}$வேன்-மத்தமஸ்-***
***தத்ஸர்வம் வ்யபனீய மே பஸு$^{1}$-பதே ஸாக்ஷாத்***
***ப்ரஸன்னோ ப$^{4}$வ ॥***

*பசுபதியே! தினமும் புறத்தே உள்ள இருளை விலக்கும் தாமரைத் தோழனான ஒரு கதிரவன் கண்ணுக்குப் புலப்படுகிறான். நீங்கள் கோடி சூரிய ஒளி படைத்தவர். ஆயினும், என் கண்களுக்கு ஏன் புலப்படாமல் இருக்கிறீர்கள்? அந்தோ என் அஞ்ஞான இருள் எவ்வளவு கனமானதாயிருக்க வேண்டும்? அதனை அறவே நீக்கி என் கண்ணெதிரே பிரசன்னமாவீர்!*

**(59)**

ஹம்ஸ: பத்3ம-வனம் ஸமிச்ச2தி யதா2 நீலாம்பு3த3ம் சாதக:
கோக: கோக-நத3 ப்ரியம் ப்ரதி-தி3னம் சந்த்3ரம்
சகோரஸ்ததா2 ।
சேதோ வாஞ்ச2தி மாமகம் பஸு1-பதே சின்மார்க3
ம்ரு2க்3யம் விபோ4
கௌ3ரீ நாத2 ப4வத்பதா3ப்3ஜ-யுக3லம் கைவல்ய
ஸௌக்2ய-ப்ரத3ம் ॥

பசுபதியான பார்வதி மணாளனே! விபுவே! எவ்வாறு அன்னம் தாமரைத் தடாகத்தையும், சாதக பக்ஷி கார்மேகத்தையும், சக்ரவாகப் பறவை கதிரவனையும் சகோரப் புள் சந்திரனையும் விரும்பி நிற்கின்றனவோ, அங்ஙனமே என் மனம் ஞான மார்க்கத்தால் நாடக் கூடியதும், மோக்ஷத்தை அளிக்க வல்லதுமான உமது திருவடித்தாமரைகளை நாடோறும் விரும்பி நிற்கிறது.

**(60)**

ரோத4ஸ்தோயஹ்ரு2த: ஸ்1ரமேண பதி2கஸ்1சா2யாம்
தரோர்வ்ரு2ஷ்டித:
பீ4த: ஸ்வஸ்த2 க்3ரு2ஹம் க்3ரு2ஹஸ்த2ம் அதிதி2ர்தீ3ன:
ப்ரப4ம் தா4ர்மிகம் ।
தீ3பம் ஸந்தமஸாகுலஸ்1ச ஸி1கி2னம் ஸீ1தாவ்ரு2தஸ்த்வம்
ததா2
சேதஸ்ஸர்வ ப4யாபஹம் வ்ரஜ ஸுக2ம் ஸ1ம்போ4:
பதா3ம்போ4ருஹம் ॥

மனமே! வெள்ளத்தில் சிக்குண்டவன் கரையையும், வழிப்போக்கன் மர நிழலையும், மழைக்கு அஞ்சியவன் சொஸ்தமான வீட்டையும், விருந்தாளி இல்லறத்தானையும், ஏழையானவன் தருமச்சித்தங் கொண்ட செல்வந்தனையும், இருளில் துன்புற்றவன் விளக்கையும், குளிரால் வாடுபவன் நெருப்பையும் எப்படி அடைய விரும்புவானோ, அம்மாதிரியே நீ (மனம்) அச்சத்தை அகற்றி இன்பத்தை அளிக்கும் சம்புவின் திருவடித் தாமரையை விரும்பி நிற்பாயாக!

# ரிபு கீதை

## தியாகராஜன்

*அத்வைத சொரூபத்தில் அபேத நிஷ்டை உரைக்கும் 26-ஆவது அத்தியாயத்தை மீண்டும் மீண்டும் பாராயணம் செய்தால் அது நம்மை சமாதி நிலைக்குக் கொண்டு செல்லும் என்று ஸ்ரீ பகவான் அருளியுள்ளார்.*

*அந்த அத்தியாயத்தின் பாடல்களை, ஸ்ரீ பகவான் அவ்வப்போது, அவை தொடர்பாக அருளியுள்ள விளக்கங்களோடு, பக்தர்களுக்காக சமர்ப்பிக்கின்றோம்.*

***எதனிடையிற் சங்கற்ப விகற்ப மில்லை***
***எதனிடையிற் சாந்தியில்லை தாந்தி யில்லை***
***யெதனிடையிற் மனதுமில்லை மதியு மில்லை***
***யெதனிடையிற் மயலுமில்லை துணிவு மில்லை***
***யெதனிடையிற் பாவமிலை யபாவமில்லை***
***யெதனிடையி லித்துவித வறிவே யில்லை***
***தன்மயமாய்த் துவித பய மணுவு மின்றி***
***யசஞ்சலமா யநவரதஞ் சுகித்தி ருப்பாய்! (ரிபுகீதை 26/5)***

***எதனிடையிற் றோடமிலை குணமு மில்லை***
***யெதனிடையிற் றுக்கசுக மெவையு மில்லை***
***யெதனிடையின் மோனமிலை வாக்கு மில்லை***
***யெதனிடையிற் றுவந்துவமே தொன்று மில்லை***
***யெதனிடையிற் றேகமக மெனலே யில்லை***
***யெதனிடையிற் றிருசியமோ ரணுவு மில்லை***
***யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி***
***யம்மயமா யநவரதஞ் சுகித்திருப்பாய்! (ரிபுகீதை 26/6)***

***வசனாம்ருதம் – 1/பக்.19– 6வது பதிப்பு, 2004***

*கே: ஆத்மாவை ஸாக்ஷாத்கரிக்க பகவானுக்கு எவ்வளவு காலமாயிற்று ?*

*ஸ்ரீ பகவான்: உடம்பொன்று காணப்படுவதால், இந்தக் கேள்வி எழுகிறது. அகந்தை உடம்புடன் சம்பந்தப் படுவதால், இது போன்ற தோற்றங்களும் கேள்விகளும் உதிக்கின்றன. அகந்தை சூக்ஷ்ம சரீரமாம் மனத்துடன் சம்பந்திக்கும்போது சூக்ஷ்மப் பிரபஞ்சத்தைப் பார்க்கிறோம். கனவில் நடப்பது இதுவே. தூக்கத்திலோ திருசியம் (காட்சி) ஒன்றுமில்லை. அதனால் திரஷ்டா (காண்பான்) இல்லாது போய்விட்டானா? திரஷ்டா அங்கே இருந்திராவிடில் தூங்கினோம் என்ற ஞாபகத்திற்கே இடமிராது. தூங்கினவன் யார்? தூக்கத்தின் போது துக்கம் என்னும் எண்ணம் யாருக்குமில்லை விழித்துக் கொண்டபின், நாம் நன்றாய்த் தூங்கியதாக ஞாபகமுறுகிறோம், சொல்லிக் கொள்கிறோம். ஆகவே விழிப்பு, கனவு, தூக்கம் மூன்றின் முன்னே நான் ஒன்றே. இம்மூன்று அவஸ்தை (நிலைமை)யிலும் மாறாதிருக்கும் அடிப்படை உண்மை ஒன்றே. அது கேவலம் இருப்பு மாத்திரம், அதில் நீயுமில்லை, நானுமில்லை, அவன், அது என்பனவும் இல்லை, சென்ற காலம், நிகழ்காலம், வருங்காலமென்பனவும் இல்லை. அது தேசகாலமற்றது, **பா**வனைக் கெட்டாதது. அது ஒன்றே யதார்த்த மாயுள்ளது.*

***வசனாம்ருதம் – 1/ பக். 98***

*கே: அனுபவ நிலையில் அறிவு விளக்கமுண்டா?*

*ஸ்ரீ பகவான்: தூக்கமே அறிவற்ற நிலை. அனுபவ மென்பது அறிவு விளக்கம். ஆனால் உலகியலுள்ள காண்பான் - காட்சிமயமான அறிவு விளக்கமல்ல அது. அகண்ட போதமே அது. அறிவு அல்லது ஞானமென்பதன் வாச்யார்த்தம் (சொற்பொருள்) மனோ விருத்தி, லக்ஷ்யார்த்தம் (குறிப்புப் பொருள்) ஆத்ம ஸ்வரூப போதம்.*

***வசனாம்ருதம் - 1/ பக். 102***

*கே: குருவின் தயவில்லை, அனுக்ரகமில்லை என்ன செய்வதென்ற ஏக்கமுண்டாகிறது.*

*ஸ்ரீ பகவான்: இது அறியாமையே. அதை நீக்க, ஏக்கம் யாருக்கென்று விசாரிக்க வேண்டும். தூங்கும்போது ஏக்கமோ வருத்தமோ ஒன்றுமில்லை. அங்கே நானென்னும் இவ்வகந்தையுமில்லை. அகந்தைத் தோற்றம்கிளம்பினால்உடனேஇத்தகையஎண்ணங்களும் உணர்ச்சிகளும் உடன் தொடர்கின்றன. ஆதலால் துயர் யாவும் விலக, அவை அனைத்திற்கும் மூலகாரணமாம் நமதியற்கை நிலையிலிருப்பதாகச் சொல்லலாம். அப்பொழுது எப்படி எத்துயருமின்றி ஆனந்தமாயிருக்கிறோம் என்பதை அறியவேண்டும்.*

***வசனாம்ருதம் - 2/ பக். 5 - 5 ம் பதிப்பு, 2000***

*கே: உலக வாழ்வில் இன்பமும் துன்பமும் கலந்திருக்கின்றன. இன்பமாத்திரமாய் ஏன் இருக்கக் கூடாது?*

*ஸ்ரீ பகவான்: மனம் தன் யதார்த்த நிலையில் இருப்பதே இன்பம், வெளிமுகப் படுவதே துன்பம். வாஸ்தவமாயிருப்பது இன்பமே. நமதியல்பே இன்பம். அதை உணராமையே துன்பம்.*

***வசனாம்ருதம் - 1/ பக். 153***

*கே: ஞான பரிபூரணன் ஆயின், எனக்கேன் அது தெரியவில்லை?*

*ஸ்ரீ பகவான்: தூக்கத்தில் எக்குறைபாடும் தோன்றுவதில்லை. அத்தகைய பூர்ண அக ஸ்வரூபமே நாமாயிருக்க, விழிப்பு நிலையிலே தோன்றும் அகந்தை ஏன் எப்போதும் குறைபட்டுக் கொண்டே இருக்கிறது. அது ஒரு பொய்த் தோற்றமும் போலியுமாதலாலேயே இல்லாத கற்பனைகளையெல்லாம் செய்து கொண்டு அவற்றினிடையே ஓயாது துன்புறுகின்றது.*

**வசனாம்ருதம் – 2/ பக். 6**

*கே: விழிப்பு நிலையைக் காட்டிலும் தூக்க நிலையே மேலானதா?*

*ஸ்ரீ பகவான்: மேல் நிலை, கீழ் நிலை ஒன்றுமில்லை, தூக்கம், விழிப்பு, கனவு என்று, எல்லா நிலைமைகளிலும் நீ ஒரே விதமாகத்தான் இருக்கிறாய். தூக்கமென்பது துன்பக்கலப்பில்லாதோர் இன்ப நிலை, குறையுணர்சியும், துக்கமும் விழிப்பு நிலையிலேயே உண்டாகிறது. இரண்டு நிலைமைகளிலும் நீயே இருந்த போதிலும், விழிப்பு நிலையில் தூக்கத்திலுள்ள இன்பம் மறைந்து, துக்கம் தோன்றுவது ஏன்? மனத்தின் எழுச்சியினாலேயே! மனமோ அகந்தையினின்று எழுவது. அகந்தை தூய உணர்வினின்று உதிக்கிறது. அனைத்தின் மூலமாம் தூய உணர்வே, தானாய் நிலைத்திருப்பதே ஆனந்தம்.*

**வசனாம்ருதம் –2/ பக். 133**

*கே: உடலுணர்வு அனாது ஸஹஜ சமாதி சித்திக்காதா?*

*ஸ்ரீ பகவான்: முதலில் உடலுணர்வு என்னவென்று பார்ப்போம். உடலும் அத்துடன் வரையறுக்கப்பட்ட ஒரு உணர்வும் சேர்ந்து உடலுணர்வு எனப்படுகிறது. அவ்வுடலுணர்வு எந்தவித உபாதியும் தோற்றமும், மறைவுமற்றதோர் உண்மையுணர்விலே தோன்றி மறைவதாகும். அம்மெய்யுணர்விலேயே நிலைநிற்றல் சமாதி எனப்படும். உடலுணர்வு இருக்குங்காலும் அந்நிலை நமதியல்பாகவே இருந்த போதிலும், உடலுணர்வைக் கடந்துள்ள அந்நிலை உடலுணர்வு அற்றபோதே மறைப்பின்றி தெளிவுற விளங்குகிறது. ஆயினும் அந்நிலை, அதனை நன்கு உணர்ந்தோரிடம் உடலுணர்வின் தோற்ற மறைவுகளை எதிர்பாராது இயல்பாகவே என்றும் ஒளிரும்.*

**வசனாம்ருதம் – 1/ பக். 120**

*கே: இவ்வுடலுணர்வு ஒழிய விரும்புகிறேன், முயல்கிறேன் ...*

*ஸ்ரீ பகவான்: உடல் மீதுள்ள துணிகளையெல்லாம் களைந்து விடலாம். உடலைக் களைவது எப்படி? அதை எங்கே களைந்தெறிந்தாலும் அங்கே 'தானாம்' அது இருந்து கொண்டு தானேயிருக்கும். அவ்வாறே, தன்னை மறைக்கும் உபாதிகள் தோன்றினும், மறையினும் தனக்கோர் கூடுதல் குறைவின்றி, தோன்றாது, மறையாது என்றும் ஒளிரும் ஒன்றே ஆத்ம ஸ்வரூபம். யதார்த்தம் மிகவெளிது. நமதுண்மை நிலையே, இயல்பு நிலையே அது. அதற்கு மேல் என்ன சொல்வது? ஆயினும் இந்த சர்வ சகஜமான உண்மையை உணர்த்துவதற்காக எத்தனை மதங்கள், கொள்கைகள், சித்தந்தங்கள், வாதப் பிரதிவாதங்கள். அப்பப்பா!*

## அனுதினமும் ஸ்ரீ பகவானுடன் - 436 - பதிப்பு - 2003

*கே: ஆன்ம சாக்ஷாத்காரமடைந்தவுடன் மனிதன் காண்பது என்ன?*

*ஸ்ரீ பகவான்: காண்பது ஒன்றுமேயில்லை. காண்பது என்பது தானாக இருத்தலே. ஆன்மஸாக்ஷாத்கார நிலை என்று நாம் சொல்லுவது, ஏதோ புதிதாக அடைவது அல்ல, அல்லது தூரத்திலிருக்கும் இலக்கை அடைவதுமல்ல. எவ்வாறு நீ எப்போதும் இருந்தாயோ, எப்போதும் இருக்கிறாயோ அதுவாய் இருத்தலே ஆகும். உண்மையல்லாததை உண்மையென்று சாக்ஷாத்கரித்தலை (நினைத்தலை) விட்டு விடுவதே நாம் செய்ய வேண்டியது. நாம் அனைவரும் உண்மை (சாக்ஷாத்) அல்லாததை உண்மையென்று நினைக்கிறோம் (சாக்ஷாத்கரிக்கிறோம்) அந்த வழக்கத்தைக் கைவிடுவது மட்டுமே, நாம் செய்ய வேண்டியது. பின்னர் ஆன்மாவை ஆன்மாவாக உணர்வோம். அதாவது ஆன்மாவாகவே இருப்போம். அந்நிலையில், நமக்குள்ளே தானாக விளங்கும் ஆன்மாவைக் கண்டுபிடிக்க நினைத்தோமே என்று நம்மைப் பார்த்து நாமே நகைப்போம்.*

# இலங்கை கண்ட இமயம் நிகர் சித்தர்

**இலங்கை சுப்பையா**

*மனித இனத்தின் பரிணாம வளர்ச்சியில் மானிட வர்க்கத்தில் மாபெரும் மகான்களும் ஞானிகளும் தோன்றுவதைக் காலங்காலமாகப் பார்த்திருக்கிறார்கள்.*

*1897-ஆம் ஆண்டு சுவாமி விவேகானந்தரின் அமெரிக்க விஜயம் நிறைவேறிய பின்பு பாரதம் திரும்புமுன் இலங்கை மண்ணில் அவர் திருப்பாதம் பதிவதற்கு இறைவன் திருவருள் கைகூடியது.*

*அச்சந்தர்ப்பத்தில் சுவாமிகளுக்கு யாழ்ப்பாணத்தில் யாழ் இந்துக் கல்லூரியில் பெரும் வரவேற்பு வைபவம் ஏற்பாடாகி இருந்தது. அச்சமயத்தில் சுவாமிகளின் மேற்கத்திய நாட்டின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த வெற்றி விஜயம் இளம் யோகநாதனென்பவரின் உள்ளத்தில் ஆத்மிகப் பொறியை உருவாக்கியது. எவ்வாறெனில் சுவாமிகள் தனக்களித்த உற்சாகமான வரவேற்பில் "நேரம் குறுகியது; ஆனால் பேசும் பொருளோ மிகவும் பெரியது" என்று ஒரு உந்துதலை ஊட்டக்கூடிய வசனம் ஒன்றை எடுத்துரைத்தார். அதைக் கேட்டதுமே யோகநாதன் கூட்டத்திலிருந்து புறப்பட்டு பூரண உறுதியுடன் பரம்பொருளை அறியும் மார்க்கத்தில் தலைப்பட்டார். அந்தப் பரம்பொருளின் அருளாசியுடன் யோகநாதன் தன்பிறவி எடுத்த பயனாக ஜீவன் முக்தி நிலை எய்து சிவயோக சுவாமிகளெனப் பெயர் பெற்றார்.*


சிவயோக சுவாமிகள்

சிவயோக சுவாமிகள், மாவிட்டபுரம் என்னும் கிராமத்தில் 1872-ஆம் ஆண்டு மே மாதம் 29-ஆம் திகதி பிறந்தார். பாடசாலையில் நடுத்தர படிப்பை முடித்துவிட்டு அக்கால ஆங்கிலேயரின் ஆட்சியில் நீர்ப்பாசன இலாகாவில் களஞ்சிய பொறுப்பாளராக கடமையாற்றினார்.

அக்காலகட்டத்தில் அவருக்குள்ளிருந்த ஆன்மிக ஆர்வம் அவரை அடிக்கடி யாழ் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு அழைத்துச் சென்றது. அந்தச் சுப்ரமணியக் கோயிலில் அவரின் குருநாதராகிய செல்லப்பா சுவாமிகள் தன் வருங்கால சீடனின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

அந்தக் காலத்தில், தான் வேலை பார்த்த இடத்திலிருந்து தன் குருநாதரைத் தரிசிப்பதற்கு வாகன வசதி மிகவும் குறைவாக இருந்ததால் அநேக நாட்கள் நடந்தே சென்றிருக்கிறார். குருவின் அருளால் யோகநாதன் நித்திய ஞானத் தெளிவுபெற்று 93 வயது வரை ஜீவன் முக்தனாக வாழ்ந்து பின் விதேகமுக்தி அடைந்தார். இவர்தம் செல்லப்பா சுவாமியின் குருநாதன் பெயர் கடையிற் சுவாமி. இவரின் சமாதிக் கோயில் யாழ் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் உள்ளது. இவருடைய பூர்விகம் பாரதத்தின் கர்நாடகப் பிரதேசமெனக் கருதப்படுகிறது. இவர் கர்நாடகத்தில் ஒரு நீதிபதியாகக் கடமையாற்றியவ ரென்றும் ஒரு தீர்ப்பில் சட்டத்தின் பிரகாரம் சரியென்றும்

ஆனால் மனசாட்சியின்படி அது விரோதமாக இருந்ததாலும் தன் வேலையை ராஜினாமா செய்துவிட்டு ஈற்றில் இலங்கையை சேர்ந்தாரென அறியக்கிடக்கிறது.

குருநாதரின் தொடர்பு யோகநாதனின் உள்ளர்த்தமுள்ள உள்ளுணர்வால் உலக வாழ்வுக்கு வேண்டிய வேலையை உதற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. குருநாதர் செல்லப்பரின் அருளில் நிரந்தரமாக நிலைத்திட தெய்வீக விதி உடன்பாடாகியது.

அதன்பின் சிவயோக சுவாமிகளின் வாழ்க்கை வரலாறு ஓர் தெய்வீகத் திருவிளையாடலே.

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் தீவிர பக்தரான காலஞ்சென்ற பேராசிரியர் K. சுவாமிநாதன், சிவபெருமானின் திருவிளையாடல்களைக் கூறும்போது சொல்கின்றார்

"The consubstantiality and interplay of God and man from the very foundation of South Indian Saivaism". "Well pleased to intermingle with his servants, Siva, enters in among the saintly throng and conceals his form, assumes another and with love enraptured, sports."

மறைபொருளாகிய சிவபிரானே சிவயோக சுவாமிகளாக வெளிப்பாடாகி அதிர்ஷ்டமுள்ள மாந்தர்க்கு வழிகாட்டியாகி பரம கிருபையைப் பொழிந்து ஆழ்ந்த அர்த்தமுள்ள வாழ்வை மலரச் செய்கின்றார்.

தொடர்ந்து பேராசிரியர் கூறுவது:-

"தமிழ் மேதாவிலாசத்துக்கு சர்வ வியாபகமான ஆத்ம நம்பிக்கையின் அபிவிருத்திக்கு உறுதியான அதிவாரமாகிய ஆன்ம அனுபூதி - அதுமுதலும் முடிவுமான மத சம்பந்த தலைமுறைத் தத்துவம் (ஐதிகம்). தெய்வீக ஏகாந்த ஜோதியாய் ஒவ்வொரு மனித இதயத்திலும் மறைபொருளாய் இருப்பது சிந்தியமாகிய

வாலறிவு. சிவமே மேலாந்தன்மை அறிவுருவாகி இருநிலை அறிவை அழிப்பவர்.''

இதுவே அகந்தையை வேரறுத்தல். இதுவே ரமண பகவானின் மூலாதார போதனையும் சிவயோக சுவாமிகளின் அனுபூதியும்.

சிவயோக சுவாமிகள் பகவான் ரமண மகரிஷிகளின் சமகாலத்தவர் மட்டுமன்றி அத்வைத வேதாந்த ஞான ரசத்தின் பிரதிபலிப்பாகவும் சித்தாந்த தத்துவத்தின் மாறுபாடில்லாமலும் இருந்தார்.

பகவான் ரமணரின் விசார மார்க்க கேள்வியான "நான் யார்?" என்பதற்கு சிவயோக சுவாமிகள் விடை பகர்கின்றார்.

"நீ உடம்பன்று, மனம் அன்று, புத்தியன்று, சித்தமன்று. நீ ஆத்மா. ஆத்மா ஒருபோதும் அழியாது. இது மகான்களின் அனுபவ சித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாய் பதியக் கடவது. எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலை என்று சாதனை செய்?"

சுவாமிகளை அடியேன் தரிசிக்கும் பாக்கியம் 1957-ஆம் ஆண்டு கிடைத்தது. அவர் குடியிருந்த சிறு குடிசையிலிருந்து வெளியே வந்து எனது தோளில் தட்டி ஆசிர்வதிக்கும்போது ஓர் ஒளி வெள்ளக் காட்சியை அனுபவிக்கக் கூடியதாயிருந்தது.

சுவாமிகளின் சீடர்களில் கைதடியில் (யாழ் மாவட்டம்) வாழ்ந்த மார்க்கண்டு சுவாமி ஜீவன் முக்தி நிலை எய்தியவர். அவர் அடியேனுக்கு அளித்த உபதேசம்:- "ஆத்திரப்படாதே. அவசரப்படாதே.

அஞ்சாதே. ஈற்றில் யாவும் வெற்றியாய் முடியும்.''

வேதாந்த தத்துவமேதை Dr. T.M.P. மகாதேவன் சிவயோக சுவாமிகளை 1951-ஆம் ஆண்டளவில்

*சந்தித்தார். தன்னுடைய அனுபவத்தை சென்னை வானொலி நிலையத்தினூடாக வெளிப்படுத்தினார்.*

*பகவான் ரமண மகரிஷியைப் பற்றி* Dr. *மகாதேவன் வர்ணித்தது குறிப்பிடத்தக்கது.*

*"பிறப்பே இல்லாதவருக்கு பிறந்தநாள் நிர்ணயித்திருக் கிறோம். ஸ்ரீ ரமணர் அத்வைதத்தின் மனித உருவமே."*

*சரித்திரம் காணா மகா புருஷர் ஸ்ரீ ரமண பகவானும் சித்த புருஷர் சிவயோக சுவாமிகளும் மானிட சமுதாய ஈடேற்றத்திற்கு வகுத்த வழி ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களை நீக்கி ஞான வழியில் நடந்து உய்வு பெறுவதே மகத்தான கடமை.*

*[பகவானை யோகா சுவாமிகள் ஆரம்ப கால அகவையில் சந்தித்து ஆன்மிக எழுச்சி பெற்றதை முதிய அன்பர்கள் கூறக் கேட்டுள்ளோம். ஆயினும் அது குறித்த குறிப்புகள் ஏதும் கிடைக்கப் பெறவில்லை.]*

# இனிவரும் திருநாட்கள் – 2012

| | | | |
|---|---|---|---|
| *ஜூன்* | 13 | *புதன்* | *மகாபூஜை* |
| *ஜூன்* | 30 | *சனி* | *பசு லட்சுமி தினம்* |
| *ஜூலை* | 3 | *செவ்வாய்* | *குரு பூர்ணிமா* |
| *செப்டம்பர்* | 1 | *சனி* | *அருணை விஜய தினம்* |
| *அக்டோபர்* | 16 | *செவ்வாய்* | *நவராத்திரி தொடக்கம்* |
| | 23 | *செவ்வாய்* | *சரஸ்வதி பூஜை* |
| | 24 | *புதன்* | *விஜயதசமி* |
| *நவம்பர்* | 13 | *செவ்வாய்* | *தீபாவளி* |
| | 18 | *ஞாயிறு* | *கார்த்திகை தீப விழா தொடக்கம்* |
| | 27 | *செவ்வாய்* | *கார்த்திகை தீபம்* |
| *டிசம்பர்* | 29 | *சனி* | *ஸ்ரீ பகவானது 133-ஆவது ஜயந்தி* |

# மோனத்தின் மகிமை

## வி. நிரஞ்சன்

*“ரங்கா, எங்கே வார்த்தைகள் இல்லையோ அங்கே நான் இருக்கின்றேன்,” என்றனர் பகவான்.*

*“பின் எங்களிடம் ஏன் பேசிக்கொண்டிருக்கின்றீர்கள்?” என்று கேட்டார் ரங்கன்.*

*“கருணை மேலீட்டால்” என்று பகவான் பகர்ந்தனர்.*

வார்த்தைகளை விட அதி வல்லமையானது மோனம் என்பர் பகவான். ஜி.வி. சுப்பராமையாவிடம் மோனம் என்பது என்ன என்று பகவான் விளக்குகின்றார். மௌனம் நான்கு வகைப்படும்: கண்களின் மௌனம், காதுகளின் மௌனம், பேச்சின் மௌனம், நான்காவது மனோ மௌனம். மனதின் மௌனமே மோனம் என்று கூறப்படுகின்றது. மௌன விரதம் என்பது வாய் மூடி இருப்பது அன்று, மனம் அடங்கி இருப்பதே.

“சித்தம் சிறிது அசையச் சம்சாரம் நிச்சலமாச் / சித்தம் நிலை நிற்க முக்தி” என்பது “தேவிகாலோத்திரத்தை”த் தமிழில் ஆக்கிய பகவான் ரமணரின் வாக்கு. மனதின் சலனமே சம்சாரம்; அசல மனமே முக்தி. பகவானின் உபதேசத்தின்படி மோனம் என்பது வாக்கு மனம் கடந்த நிலை, உள்ளல் அற உள்ள நிலை. அதுவே ஆன்மஞானம்.

சொல் வெளி வரவேண்டுமானால், அதற்கு மூலமாக எண்ணம் வேண்டும், எண்ணத்திற்கு மூலமாக நான் என்னும் எண்ணம் எழ வேண்டும்; அதற்கும் மூலமாக

பூரண இருப்பு அறிவு ஆனந்தம் தோன்றி மறையாது ஒளிரும் பூன்றப் பொருளாக சுயமே விளங்கிக் கொண்டிருக்கின்றது. ஆகவே சொல்லுக்குக் கொள்ளுத் தாத்தா பூரண உணர்வு; பூரண உணர்வின் கொள்ளுப் பெயரன் சொல் ஆகும். சொல்லின் வலிமையை விட சொல்லின் மூலத்திற்கும் மூலத்திற்கும் மூலமான பூரண உணர்வின் வலிமையை என்னென்பது. இவ்வாறு பகவான் சொல்லிற்கும் பூரண ஆன்ம உணர்விற்கும் உள்ள தொடர்பினை விளக்குகின்றனர். சொல் எவ்வளவு வலிமை அற்றது என்பதையும், சொல் கடந்து விளங்கும் ஆன்ம உணர்வின் பேச்சு எவ்வளவு வல்லமையானது என்பதையும் ஒப்பிட்டு விளக்குகின்றனர்.

ஏன் பகவான் மற்றவர்களைப்போல் பல இடங்களுக்கும் சென்று மேடைகளில் ஏறிப் பேசிப் போதிப்பது இல்லை என்று சிலர் கேட்ட பொழுது பகவான் கொடுத்த பதில்: பேச்சை விட மோனம் அதி வலியது. மேடைப் பேச்சைக் கேட்கும் பொழுது அது ஒருவனை உணர்ச்சி வயப்படுத்தலாம்; ஆனால் அது நீடித்து நிலைக்காது; அதே சமயம் ஞானி ஒருவரின் மோன சன்னிதியில் வீற்றிருக்கும் ஒருவன் மனதில் அடிப்படை மாற்றம் நிரந்தரமாய் அடைந்து அவ்விடத்தை விட்டு நீங்குகிறான்.

பகவானின் மோன சன்னிதி குறித்து விசுவநாத சுவாமி விளக்கிச் சொல்கின்றார். பகவானின் சன்னிதியில் இருப்பவர்கள் அதுவரை அனுபவித்து இராத மனச் சலன ஓய்வையும் ஆனந்தத்தையும் அடைகின்றனர். ஓர் இன்ப வெள்ளத்தில் ஆழ்ந்து இருப்பது போன்ற உணர்வு. அதனாலேயே சுவாமி அதனை ரமண லஹரி என்று அழைக்கின்றனர். ரமண லஹரியின்பால் பட்டவர்களுடைய இன்ப அனுபவம் பலவகைப் படுகின்றது. பகவானிடம் கேட்கவேண்டும் என்று தேர்ந்தெடுத்த கேள்விகள் முக்கியம் அல்லாது

போய்விடுகின்றன; இல்லை அவற்றிற்கான பதில்கள் அம் மௌன சன்னிதியில் தாமாகவே கிடைத்து விடுகின்றன. சில கேள்விகள் பிறரால் கேட்கப்பட்டு பகவானின் பதிலைப் பெறுகின்றன. சிலருடைய மனம் அகமுகமாய் விடுகின்றது; சிலர் அஹம் ஸ்புரண உணர்வு அடைகின்றனர்; சிலர் சமாதியில் ஆழ்ந்துவிடுகின்றனர்.

பூஞ்சா சுவாமிகளுடைய மகள் ஷிவானி, பத்து வயதுச் சிறுமி, பகவானின் சன்னிதியில் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக சமாதியில் நிலை பெற்றிருந்தாள். அதைத் தொடர்ந்து மேஜர் சாட்விக் பகவானிடம் தனது ஐயத்தை எழுப்புகின்றார்: "பகவானே, நானோ வயதில் முதிர்ந்தவன், இந்தச் சிறுமியோ வயதில் மிகச் சிறியவள். எப்படி அவளால் மட்டும் மணிக்கணக்காகச் சமாதியில் ஆழ்ந்து இருக்க முடிகின்றது? நான் பல வருடங்கள் உங்கள் சன்னிதியிலேயே இருந்து வருகின்றேன். இருந்தும் சமாதி கூடவில்லையே?" இதற்கு பகவான் அளிக்கும் விளக்கத்தைக் காண்போம்: "அவளை விட நீங்கள் மூத்தவர் என்று எதை வைத்துச் சொல்கின்றீர்கள்?" உடலால் ஏற்படும் மூப்பு வேறு, அகமுகமாய் ஏற்படும் மூப்பு அல்லது பக்குவம் வேறு என்பதை உட்கருத்தாய்க் கொண்டிருந்தது பகவானின் கேள்வி.

பகவானின் சன்னிதியில் நிகழ்ந்த அற்புதங்கள் பதிவு செய்யப்பட்டவை ஏராளம் எனில் பதிவு செய்யப் படாதவை கணக்கிலாதவை எனலாம். ஞான மோன சன்னிதியில் அவரவர் பக்குவத்திற்கு ஏற்ப மனம் பல்வேறு விதமான அனுபவங்களை அடைகின்றது. விருபாக்ஷ குகையில் பகவானிருந்த ஆதி நாட்களில் வெளியில் மஸ்தான் சுவாமி படிகளின் மேல்ஏறி குகையை நெருங்குவதற்கு முன்பாகவே சமாதி மேலிட்டு மணிக்கணக்காய் நின்ற இடத்திலேயே பெயராது நின்றுவிடுவாராம். குகையிலிருந்து வெளிவரும் போதுதான் பகவானுக்கே இது தெரியவருமாம்.

தேசூர் அகிலாண்டம்மாவின் அனுபவம் குறிப்பிடத் தக்கது. ஒரு முழு நிலவு நாள். காலையில் பகவான் கந்தாசிரமத்தில் வெளியே பாறை ஒன்றில் அமர்ந்திருக்கின்றார். நல்ல நாளன்று பகவானிடம் தீக்ஷையும் உபதேசமும் வாங்கிக்கொள்ள அறிவுறுத்தப் பட்டார் அகிலாண்டம்மா. அதனால் பகவான் அருகில் வந்து நின்று கொண்டு அவரிடம், "எனக்கு ஏதாவது உபதேசம் செய்யுங்கள்," என்று கேட்கிறார். அவரைக் கனிவுடன் பார்த்த பகவான், "உன்னை விடாது இரு," என்று கூறினார். சற்று நேரத்தில் பாறையில் அமர்ந்தவாறே பகவான் சமாதியில் ஆழ்ந்துவிட்டனர். "உன்னை விடாது இரு" என்பதை எப்படிச் செய்வது என்பதைத் தேசூரம்மாவிற்கு பகவான் செய்து காண்பித்ததுபோல் ஆகிவிட்டது.

இதைக் கண்டுகொண்டிருந்த தேசூரம்மாவின் மனம் அடங்கி அவ்விடத்திலேயே அவர் நிலை பெற்று ஆனந்தத் திவலைகளால் ஆட்கொள்ளப் பட்டார். "'உன்னை விடாது இரு' என்றால் என்ன என்று நான் அறியேன். ஆனால் சாஸ்திரங்களைப் படித்து அதன் வழி நின்று நீண்ட காலம் கழித்து அடையக்கூடிய லட்சிய அனுபவம் அன்று எனக்கு பகவான் சன்னிதியில் நின்ற மாத்திரத் திலேயே கிட்டிவிட்டது என்றே நான் நினைக்கின்றேன்," என்று குறிப்பிடுகின்றார் அகிலாண்டம்மா தனது நினைவுகளில்.

மறைகளால் சேர்த்துச் சேமித்துக் காப்பாற்றப்படுவது மன ஞானம்; மனதின் உரு மாய்ந்த இடத்தில் தானே சுயமாய் ஒளிர்வது மெய் ஞானம். "மன உரு மாய மெய் மன்னும் மா யோகி / தனக்கு ஓர் செயல் இலை உந்தீபற / தனாது இயல் சார்ந்தனன் உந்தீபற," என்பது பகவான் வாக்கு. மன உரு மாய்தல் என்பது அஞ்ஞான நீக்கம்; அஞ்ஞான நீக்கம் என்பது ஞான விளக்கம், சொருப ஞானம், ஆன்மஞானம், சுஞ்ஞானம். ஆன்மஞான

இன்பமே குருவும், இறைவனும், அருளும் ஆகும். இதுதான் பகவானின் மோன சமாதி "சொலாமற் சொலி உணர்த்தும்" பேருண்மை.

பகவானின் மோன சமாதியில் ஒரு முழு நிலவு நாள் அன்று காவிய கண்ட கணபதி முனியின் "உமா சஹஸ்ரத்"தின் பெரும் பகுதிப் பாடல்கள் முனியால் சொல்லப்பட்டு அவரது அடியவர்களால் எழுதப்பட்டு நிறைவு பெற்றது ரமண பக்தர்களின் மத்தியில் பரவலாகத் தெரிந்த செய்தி. இன்னொரு நிகழ்ச்சி. டி.வி. கபாலி சாஸ்திரி என்பார் கணபதி முனியின் சீடர், பகவானின் பக்தரும் கூட. அவர் 1930-இல் ஆசிரமத்திற்கு வந்திருந்த பொழுது பகவான் அவரிடம் தமிழில் வெளிவந்த தனது பாடல்களின் வடமொழி ஆக்கம் ஒன்றினைக் கொடுத்து அதனைச் சரி பார்த்துத் திருத்தங்கள் செய்யும்படி கேட்டுக் கொண்டார். வடமொழி ஆக்கம் யாரோ ஒருவரால் செய்யப்பட்டு இருந்தது. காலையில் பணியைத் துவங்கிய சாஸ்திரி பல மணி நேர விவாதம், போராட்டத்திற்குப் பின்னர் இரண்டு பாடல்களையே முடித்திருந்தார். பகவான் மாலை மீந்து இருப்பவற்றைக் கவனிக்கலாம் என்றனர். மாலையில் பகவான் வந்து இருக்கையில் அமர்ந்த உடன் வேலையை அரம்பித்த சாஸ்திரி மீதமுள்ள முப்பத்து மூன்று பாடல்களையும் மூன்று மணி நேரத்திற்குள் தானே வியக்கும்படி சரிபார்த்து முடித்து விட்டிருந்தார். அவருடன் வந்திருந்த அவரது நெருங்கிய நண்பர் எஸ்.பி. பண்டிட் என்பார் அங்கே கண்ட காட்சியை விவரிக்கின்றார். "பேரொளி பெருகிய மகரிஷியின் கண்கள் அவ்வளவு நேரமும் சாஸ்திரியின் மீதே நிலைத்துக் கிடந்தன. பார்ப்பவரை உணர்ச்சி வயப்படுத்தும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது."

மகரிஷியின் கவனம் வெளிப்படையாகத் தன் மீது நிலைத்திருந்தது தெரியாமல் சாஸ்திரி பணியைச் செய்து கொண்டிருந்து விட்டு, இறுதிப் பாடலை அடைந்து அது

உரிய சந்தத்தில் வரவில்லை எனத் தெரிவிக்கின்றார். "உரிய சந்தத்தில் வரவில்லையா?" என்று கேட்ட மகரிஷி மோனத்தில் ஆழ்ந்து விட்டார். "ஒரே கணத்தில் எனது அடி வயிற்றிலிருந்து, தண்டு வடத்தின் வேர்ப்பகுதியிலிருந்து, அதிவலுவான ஒரு சக்தி வெளிப்பட்டு பீறிட்டு மேல் எழுந்தது; என் முயற்சி இன்றியே என் வாயிலிருந்து அலறி வெளி வந்தது ஒரு பாடல். அது வேண்டிய சந்தத்தில் அமைந்திருந்த பாடலாயிருந்தது." இவ்வாறு கூறுகின்றார் சாஸ்திரி.

பகவானிடம் தீவிர பக்தி கொண்டு ஒழுகியவர்களுள் கே.கே. நம்பியாரும் ஒருவர். அவரது சகோதரி மாதவி அம்மாள் ஆவார். மாதவி அம்மாவும் பகவானின் மீது மிகுந்த பக்தி கொண்டவர். மாதவி அம்மளின் கணவர் பி.சி. நம்பியார் ஒரு பல் மருத்துவர். அவருக்கு பகவானின் மீது எந்த ஈடுபாடும் இருக்கவில்லை. ஒருமுறை அவர் திருவண்ணாமலையில் வேலை பார்த்துக் கொண்டிருந்த சமயம் பகவானுக்கு பல்லில் வலி ஏற்பட்ட பொழுது மருத்துவர் என்கின்ற முறையில் அவர் ஆசிரமத்திற்கு அழைக்கப்பட்டார். அவரும் தன்னை மருத்துவர் என்று நினைத்துக்கொண்டே ஆசிரமத்தை அடைந்து பகவான் இருக்கும் இடத்திற்குச் சென்றார். பகவானை ஒரு நோயாளி என்கின்ற முறையிலே காணச்சென்ற அவர் பகவானை வணங்கவும் இல்லை. நேராக பகவானிடம் சென்று, "வாயைத்தொர," என்று மலையாளம் கலந்த தமிழில் பேசினார். அவர் நடந்துகொண்ட முறை மற்றவர்களுக்கு அதிர்ச்சியாய் இருந்தது. பகவானின் பல் ஒன்று எடுக்கப்பட்டது; மருத்துவர் அவ்விடத்தை விட்டு நீங்கினார்; ஆனால் அவர் மன மாற்றம் அடைந்தவரானார். அவர் பகவானின் சன்னிதிக்கு மீண்டும் இழுக்கப்பட்டு பகவானின் பக்தர்களில் ஒருவரானார். பகவானின் மோன சன்னிதியில் என்ன மாற்றம் நடந்திருக்கக் கூடும்? அதன் பிறகு நோயைக் குணப்படுத்தும் ஆற்றலிலும் அவர் முன்னைவிடச் சிறந்து விளங்குவதையும் உணர்ந்தார்.

அவரைப் பற்றிய இன்னொரு நிகழ்ச்சியும் குறிப்பிடத் தக்கது.

ஒருமுறை வயது முதிர்ந்த மேலை நாட்டினர் ஒருவர் பகவானைக் காண வந்திருந்தார். மலையின் மீது ஏறிச் சென்றவர் சற்று நேரத்தில் மலையிலிருந்து கீழே இறங்க வழி தெரியாமல் திகைத்துப் போனார். நேரம் கழிந்தது. மாலை நேர வெளிச்சமும் மறைந்து வானம் கருக்கத் துவங்கியது. அவரோ வழி காண இயலாது திகைத்தவாறு இருக்கின்றார். அப்பொழுது அவ்வழியாய் வந்த பகவான் அவருக்குச் செல்லும் வழியைக் காட்டிவிட்டுச் செல்கின்றார். ஆசிரமத்தில் இருந்தவர்கள் மலைக்குச் சென்ற அவர் திரும்பி வராதது குறித்துக் கவலை கொண்டு இருக்கின்ற நேரத்தில் அவர் ஆசிரமத்தை அடைகின்றார். கீழே இறங்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்த தன்னை அங்கே வந்த பகவான் எவ்வாறு வழி காண்பித்து அனுப்பினார் என்று விவரிக்கின்றார். இது கேட்ட ஆசிரமத்தினர் பெரும் வியப்பு அடைகின்றனர். பகவானோ ஆசிரமத்தில் அமர்ந்தவண்ணமே இருக்கின்றார், வேறு எங்கும் அவர் போகவே இல்லை, ஆனால் அவரோ பகவான் மேலே வந்து தனக்கு உதவிச் சென்றார் என்கின்றார். உண்மையை அறிந்த அவருக்கு இந் நிகழ்ச்சி அற்புதமாயிற்று. பகவானது அடியவர்கள் மத்தியில் இந்த அதிசயம் வியந்து பேசப்பட்டது. இது மாதவி அம்மளின் கணவருக்கும் எட்டியது. அச் சமயம் அவர் அண்ணாமலையில் இருக்கவில்லை. விசாகப் பட்டணத்தில் வேலை பார்த்துக் கொண்டு இருந்தார். இது குறித்து அவர் தனது நண்பர்களாகிய ஆசிரமத்தவருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் பகவான் எங்கிருந்தோ வரும் வெளிநாட்டவருக்கு எல்லாம் அற்புதங்களை செய்து அருளுகின்றார், ஆனால் இங்கே இருப்பவர்களுக்கு அவர் அவ்வாறு செய்வதில்லை என்று ஒரு அன்பு கலந்த ஊடலாய்க் குறைப்பட்டுக் கொள்கின்றார். அதுவும் பகவானிடம் தெரிவிக்கப்பட்ட பொழுது பகவான்


சொன்னார்: "அவர்கள் என்னை அடைய எவ்வளவு தியாகம் செய்து வந்திருக்கின்றனர். டாக்டர் அதற்கு என்ன தியாகம் செய்திருக்கின்றார் என்று கேளுங்கள்." எவ்வளவு பொருள் பொதிந்த வாக்கு.

ராமனாத பிரம்மச்சாரியின் உன்னத தியாகத்தைச் சிறப்பித்தும், க்ராண்ட் டஃப் என்னும் வயது முதிர்ந்த ஆங்கிலேயரின் சாத்விக இயல்பையும், உணவு நியமத்தையும், வாழ்க்கை நெறியையும், தன்னைக் காண வேண்டும் என்கின்ற ஆவலில் அவர் எடுத்துக்கொண்ட பயணத்தின் கடுமையையும், அதை எல்லம் அவர் தாங்கிய பெருமையையும் சிறப்பித்தும் பகவான் கூறிய நிகழ்ச்சிகளை விவரித்தால் நீளும்.

லெஃப்டினன்ட் கர்னல் பி.வி. கரம் சந்தானி வேலூரில் 1949-50-இல் டி.எம்.ஓ. ஆகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அச்சமயம் ஒரு இரவில் வழக்கத்திற்கு மாறாக உறக்கம் வராது படுத்தவண்ணம் இருந்தார். அப்பொழுது ஒரு தொலைபேசிச் செய்தி அவருக்கு வருகின்றது. திருவண்ணாமலையில் பகவான் ரமணர் மிகவும் உடல் நலம் குன்றி இருக்கின்றார் என்பதும் மருத்துவ உயர் அதிகாரி என்கின்ற முறையில் அவரது கவனமும் சிகிச்சையும் பகவானுக்குத் தேவைப் படுகின்றது என்பதும் அந்தச் செய்தி.

அச்சமயம் அவர் பகவானை ஒரு நோயாளியாகவும் தன்னை ஒரு மருத்துவராகவும் எண்ணியே ஆசிரமத்திற்குச் சென்று பகவானைப் பரிசோதித்து மருந்துகளை எழுதிக் கொடுத்துவிட்டுச் சென்றார். ஆன்மிக உணர்வுகள் ஏதும் அவரிடம் எழவில்லை. பகவானும் அவரும் பேசிக் கொள்ளவும் இல்லை. ஆனால் பகவானுடைய அருட்பார்வை ஒரு கணம் அவர் மீது பட்டது. அது அவருடைய மனதை ஆழமாய் ஊடுருவி, ஒரு புதிய ஆன்மீக உணர்வினைத் தோற்றுவித்தது.

பகவானின் அருட் பார்வையினால் தன்னைச் சுற்றி ஒரு ஆனந்த ஒளி நிறைந்து இருப்பதாய்ச் சந்தானிக்குத் தோன்றியது. பகவானின் அருள் வல்லபத்தால் எதிர்க்க வலுவற்று பகவானின் பால் ஈர்க்கப்பட்டவரானார். அதன் விளைவாக பகவானின் தரிசனத்திற்காகவே மீண்டும் ஒரு



முறை திருவண்ணாமலை செல்ல ஏற்பாடு செய்து கொண்டார். இச்சமயம் அவரது மனைவியையும் அழைத்துச் சென்றார். பகவானை வணங்கி அவருடைய கால் அருகில் அமர்ந்தனர் இருவரும். “எல்லையற்ற அருள் வெளியாய்த் திகழ்ந்தார் பகவான். ஆதலால்

அவரிடமிருந்து கிளம்பிய அருட்சக்தி எங்களை முற்றிலுமாய் அரவணைத்துக் கொண்டது. சாந்தம் எங்களுள்ளே நிரம்ப ஆரம்பித்தது. ஆனந்தமும் உவகையும் கூடிய ஆழ்ந்த நிலையை எங்கள் மனம் அடைந்தது," என்று கூறுகின்றார்.

பகவான் இருந்த உன்னத நிலையை மருத்துவ நிபுணராகிய அவர் நேரில் கண்டு வியந்தார். பகவானுடைய கையில் தோன்றிய கட்டி கையையே துளைத்து நரம்புகளைக் குடைந்து குடைந்து பெரு வலியை உண்டாக்கக் கூடியதாம். இப்படித் துளைத்துப் புரட்டிக் கொடுக்கும் வலியை மன வலு நிரம்ப உள்ள ஒருவன் கூடத் தாங்கமுடியாது துடித்துத் துடித்து ஓலமிட்டுக் கொண்டிருப்பானாம். ஆனால் பகவானுடைய முகமோ சலனமற்று சாந்தமாயும், மலர்ச்சியோடும், ஒளிமிகுந்தும் காணப்பட்டது.

அப்பொழுது திடீரென்று பகவானுடைய அடியவர் ஒருவரின் கை பகவானுடைய கையில் போட்டிருந்த கட்டின் விளிம்பில் தவறிப் பட்டுவிட்டது. பகவானுடைய உடலில் ஒரு துடிப்பு தோன்றியது. அடியவர் பதறிப்போய், "பகவானே, உங்களுக்கு வலி உண்டாயிற்றா? கட்டின் விளிம்பில் தானே கை பட்டது," என்று மனம் வருந்தினார். அப்பொழுது பகவான் அருள் கூடிச் சிரித்த முகத்துடன் மெதுவாகக் கூறுகின்றார், "அந்தக் கட்டினுடைய விளிம்பு ஒரு மலை அளவு எவ்வளவு பெரிய பாரத்தைத் தாங்கிக் கொண்டிருக்கின்றது என்று உங்களுக்குத் தெரியாது." அரிதான இந்த நிகழ்ச்சியிலிருந்து பகவானின் வேதனை எவ்வளவு கடுமையானது என்று தெரிகின்றது, இருந்தும் அவரோ வேதனையின் சுவடே தெரியாத வண்ணம், இன்முகத்தவராய் சாந்தமாய் இருந்தனர் என்று சொல்கின்றார் கரம் சந்தானி.

பின்னர், பகவான் திட உணவையும், திரவ உணவையும் இருபத்து நான்கு மணி நேரம் எடுத்துக் கொள்ளாது இருந்திருக்கின்றார். கூடி இருப்பவர் எவ்வளவு கெஞ்சியும் அவர் எடுத்துக் கொள்ளவில்லை. அதனால் சிறுநீர் வெளிப்படமுடியாது போயிற்று. இந்தச் சமயம் கரம் சந்தானி மீண்டும் ஆசிரமத்திற்கு அழைக்கப்பட்டார். வந்தவர் மருத்துவராக மட்டும் வரவில்லை, பகவானின் மீது மட்டற்ற அன்பு பூண்ட பக்தராக வந்தார். நிலைமையைப் புரிந்து கொண்டவர் பகவான் கட்டாயமாக திரவ உணவு ஏதாவது எடுத்துக் கொள்ள வேண்டியது இன்றியமையாதது என்று உணர்ந்தார். ஆனால் மற்றவர்களைப்போல் தான் மருத்துவர் என்கின்ற முறையில்அவரைவற்புறுத்தஅவர்மனதுஇசையவில்லை தனது வேண்டுகோளை ஏற்று அருளுமாறு மனதில் வேண்டிக்கொண்டு மோர் நிறைந்த ஒரு டம்ளரை பகவானின் முன் அளித்தார். சற்றே அவரைப் பார்த்தனர் பகவான்; பின்னர் நடுங்கும் கைகளால் அந்த மோரைப் பருகினார். எல்லோரிடத்திருந்தும் நிம்மதிப் பெருமூச்சு கிளம்பியது. அவர்கள் சந்தானிக்கு நன்றி தெரிவித்தனர். பகவானின் அருள்வயப்பட்டு மெய் சிலிர்த்து இருந்த சந்தானியோ பகவான் தனது வேண்டுகோளுக்கு அருளியமைக்கு அளவு கடந்த நன்றி கூர்ந்தார்.

இதற்கு அடுத்து சந்தானி ஆசிரமத்திற்கு அழைக்கப்பட்ட பொழுது நள்ளிரவு ஆகியிருந்தது. பகவானுடைய அறைக்குள்ளே அவர் சென்ற சமயம் நான்கு அடியவர்கள் அங்கே இருந்தனர். அறையை விட்டு நீங்கி ஓய்வு எடுத்துக் கொள்ளுமாறு பகவான் அவர்களிடம் சொல்லிக் கொண்டிருந்தார். அவர்களோ பகவான் ஜன்னியில் ஏதோ பேசுகின்றார் என்று நினைத்துக் கொண்டு அவரைக் கவனித்துக் கொள்வதற்காக அங்கேயே நின்று கொண்டிருந்தனர். நிலைமையைப் புரிந்து கொண்ட சந்தானி அவர்களை அறையை விட்டுச் செல்லும்படி கூறவே அவர்கள் வெளியேறினர்.

பகவனோடு தனித்து விடப்பட்ட சந்தானி பகவானிடம் எதுவும் பேசவில்லை; பகவானும் அவரிடம் எதுவும் பேசவில்லை. ஆனால் பகவானிடமிருந்து வெளிக் கிளம்பிய அலைகள் தெய்வீகமாய் இருந்ததை அவர் உணர்ந்தார். பகவானுடைய உடலோ தாங்கொணாத மரண வேதனையில் துடித்துக் கொண்டிருக்கவேண்டும். ஆனால் ஒப்பற்ற அவரது ஆன்ம நிலையோ அதனால் சற்றும் பாதிக்கப்படாது இருந்தது. நினைக்க நினைக்க சந்தானி உடல் முழுவதும் ஒரு வித உவகை படர்ந்து தன்னைச் சிலிர்க்க வைப்பதாய் உணர்ந்தார். ஞான ஒளி கூடி விளங்கிக் கொண்டிருக்கும் அந்த மகான்மாவை வழி படவேண்டும் என்கின்ற தீவிரமான ஆவல் அவர் உள்ளே எழுந்தது. பகவனுடைய பாதங்களைப் பக்தர்கள் தொட்டு வணங்குவதை பகவான் விரும்புவதில்லை என்று அறிந்திருந்தார். இருந்தும் பகவானின் பாதங்களைத் தொட்டு வணங்குவதோடு இல்லாமல் அவரது பாதங்களை அன்போடு பிடித்துவிட வேண்டும் என்று அவரது மனம் தீவிரமாய்த் துடித்தது. துணிந்தவர் பகவானுடைய பாதங்களை மெள்ள அழுத்தினார். என்ன அதிசயம்! பகவான் விட்டு விட்டார். அவரது அருள் பொங்கியது. சந்தானி பரம ஆனந்தத்தில் திளைப்பதாய் உணர்ந்தார். அவரது வாழ்வின் சில கணங்களே நிகழ்ந்த அந்த நிகழ்ச்சியை என்றும் போற்றுபவரானார்.

அதிகாலை மூன்று மணிக்கு மற்றொரு சமயம் அவர் அழைக்கப்பட்டார். வலி பகவானைக் கடுமையாய் வாட்டிக் கொண்டிருக்கவேண்டும். இருந்தும் பகவான் ஆழ்ந்த நித்திரையில் இருந்தார். பொழுது விடியும் நேரம். சற்றும் பகவானுக்கு ஊறு இல்லாதவாறு அவருடைய காலருகில் சந்தானி உட்கார்ந்து கொண்டார். திடீரென்று பகவான் கண்களைத் திறந்து, அவரது அருட் பார்வையை

சந்தானி மீது நிறுத்தி "டி.எம்.ஓ" என்று மெல்லிய குரலில் கூறினார். பகவானுடைய தூய உள்ளத்தில் தானும் இடம் பெற்றமை உணர்ந்து சந்தானி மனம் நெகிழ்ந்தார். பகவானால் தான் ஆசீர்வதிக்கப்பட்டமையை உணர்ந்து அவர் பகவானை மௌனமாய் வழிபட்டார். உடல் பூராவும் ஆனந்த பரவசத்தில் சிலிர்ப்பது போலாகியது.

அந்தச் சமயம் சந்தானி மருத்துவப் பணித் துறையில் அதி உயர்ந்த பதவிக்குத் தான் தகுதி உடையவராய் இருப்பதால் அது தனக்குக் கிட்ட வேண்டும் என்பதில் அடங்காத விருப்பமும் அதனால் ஓயாத மனச் சலனமும் அடைந்திருந்தார். அடுத்தமுறை பகவானுக்கு மருத்துவப் பணி செய்ய வரும்பொழுது அவருடைய நல்லாசியை தனது விருப்பம் நிறைவேறுவதற்காக வேண்டிகொள்ள வேண்டும் என்று உறுதி செய்துகொண்டார்.

அடுத்த முறையும் வந்தது. தீவிர உறுதியோடு பகவானிடம் பதவி உயர்விற்கு வேண்டிக்கொள்ள வேண்டும் என்று கருதியவாறு பகவானை அணுகினார். ஆனால் அற்புதம் ஒன்று அங்கே நிகழ்ந்தது. பகவானைக் கண்ட உடன் அவரது மனம் நெகிழ்ந்தது; உறுதி மாயமாய்ப் போயிற்று; ஒரு புதிய நிறைவு உணர்வு அவரது உள்ளத்தில் நிறைந்து விட்டது. வேண்டுகோள் அவரிடமிருந்து வெளிவந்தது; ஆனால் அது முற்றிலும் மாறுபட்டதாய் இருந்தது: "பகவானே, பதவி உயர்விற்கான தணியாத வேட்கையிலிருந்து என்னை விடுவியுங்கள். உலக வழிப் பேறு எதையும் நான் வேண்டேன். பதிலாக, எனக்கு மனப் பரிபக்குவத்தினை அளியுங்கள்," என்று மௌனமாய்ப் பிரார்த்தித்துக் கொள்கின்றார். அவரது பிரார்த்தனை உடனேயே பலித்துவிட்டது. ஆனந்த ஜோதி வெள்ளம் ஆழமாய் அவர் உள்ளத்தில் புகுந்து பொங்கி நிறைந்தது. பக்தி மிகுந்து பகவானை அவர் வணங்க, பகவானுடைய அருட்பார்வை அவர் மீது நிலைத்திருந்தது.

*பகவானுடைய மகாசமாதி நாளன்று இன்னும் ஒரு பேரதிசயம் அவருக்குக் காத்திருந்தது. காலையிலேயே பகவானுடைய உடல் நிலையைப் பரிசோதித்த அவர் அன்றுதான் பகவான் பூவுடல் தாங்கி இருக்கும் இறுதி நாள் என்று அறிந்தார். அந் நிகழ்ச்சிக்கு முன் எப்படியாவது வேலூருக்குச் சென்று தனது மனைவியை அழைத்து வந்து பகவானின் ஆசி பெற்றுவிட வேண்டும் என்று தீவிரரானார். அவரது மனைவி பகவானுக்கு என்று ஆரஞ்சுப் பழரசம் பிழிந்து எடுத்து வந்திருந்தார். பகவானுக்குப்பழரசத்தைத்தன்அன்பின்காணிக்கையாக்க அவரது மனைவி உறுதி பூண்டிருந்தார். இருவரும் வந்து சேர்ந்தனர். ஆனால் பகவானோ நீர் கூடப் பருக மாட்டது இருந்தனர். தனது மனைவி பெருத்த ஏமாற்றம் அடைவாள் என்று உணர்ந்த சந்தானி மீண்டும் மனமுருகி மௌனமாய்ப் பகவானிடம் பிரார்த்தித்துக் கொள்ள லானார். என்ன அதிசயம்! பகவான் ஆரஞ்சுப் பழரசத்தைக் கேட்டுச் சில துளிகள் பருகினார். சற்று நேரத்தில் பூவுடலாய்த் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருந்த பூரண உணர்வு தானாய்த் தனித்தது; அதுவே அதிட்டான அறிவொளியாய் இன்றும் விளங்கி வருகின்றது.*

*வார்த்தைகளே பரிமாறப்படாத எட்டுச் சந்திப்புக்கள். குருவின் அருளுக்கு இலக்கான சந்தானி அவர்களின் கவனம் கொஞ்சம் கொஞ்சமாக வெளிமுகத்திலிருந்து உண்முகமாகின்றது. உண்முகமாக உண்முகமாக உவகை அனுபவமாகின்றது. மன மாசு அகல்கின்றது. சித்திகள் அனைத்திலும் ஆன்ம சித்தியே முதலும் முடிவும் என்கின்ற உறுதி ஏற்படுகின்றது. இதை உள் அடக்கமாய்த் தெரிவிக்கும் பகவானின் பாடல் வரிகளையே நமது பிரார்த்தனையாகவும் கொள்வோமாக:*

***ஊர்சுற்று உளம்விடாது உனைக்கண்டு அடங்கிட***
***உன்அழகைக் காட்டு அருணாசலா.***

# சிலந்தியாய் வரும் சிவனருள்

Dr.S. **ராமகிருஷ்ணன்**

*ஸ்ரீ ரமண மஹர்ஷியின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சியைப் பார்த்தோம். அவரது பிரகரண வேதாந்த நூல்களான ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை, உள்ளது நாற்பது ஆகியவற்றில் பல பாடல்களில் எங்ஙனம் சிறு முயற்சி வலியுறுத்தப் படுகிறது என்று ஆராய்வோம்.*

*ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலையில், ஸ்ரீ ரமண பகவான் அருணாசலகிரி விபுவை குருவாகவும், தெய்வமாகவும், தன் ஆத்மஸ்வரூபமாகவும் காண்கிறார். (ப[4]க்த்யைகயேஷம் கு[3]ருதே[3]வதாத்மா - ஸ்ரீமத் பாகவதம், 11-2-37)*

*குருவாக,*

***19. குற்றமுற்று அறுத்துஎனைக் குணமாய்ப் பணித்தாள்***
***குருஉருவாய் ஒளிர் அருணாசலா***

*தெய்வமாக,*

***17. கிரிஉரு ஆகிய கிருபைக் கடலே***
***கிருபை கூர்ந்துஅருளுவாய் அருணாசலா***

*தன் ஆத்ம ஸ்வரூபமாக,*

***அழகுசுந்தரம்போல் அகமும் நீயுமுற்று***
***அபின்னமாய் இருப்போம் அருணாசலா***

*பின், தத்துவம் தெரிய அருணாசலத்தைப் பிரார்த்திக்கிறார்.*

***43. தானே தானே தத்துவம் இதனைத்***
***தானே காட்டுவாய் அருணாசலா***

*ஆனால், அருணாசலத்தின் பதில்: "ஏதாவது முயற்சி செய். பின்பு, உனக்கே அது தெரியும்" என்பதே.*

***44. திரும்பி அகந்தனைத் தினம்அகக் கண்காண்***
***தெரியும் என்றனைஎன் அருணாசலா***

*திரும்பிப் பார்த்தல் அதாவது அந்தர்முகப்படுத்துதல் இங்கு முயற்சியாகிறது.*

*உள்ளது நாற்பதில்,*

***"நான்ஆர் என மனம் உள்நாடி...." (பாடல் 30)***

*மனத்தை உள்முகமாகச் செய்து "நான் யார்" விசாரம் செய்தல்.*

***நான் உதிக்கும் தானமதை நாடாமல் - நான் உதியாத்***
***தன்இழப்பைச் சார்வதுஎவன்? (பாடல் 27)***

*முதற்கண், நான் உதிக்கும் ஸ்தானமான இதயம் எனும் உள்ளத்தை நாடுதல். இதுவே முதல் முயற்சி.*

*பஹிர்முகமாக இருக்கும் மனத்தைத் திருப்பி அந்தர்முகமாக்குவதே முதற்கண் அவசியமான முயற்சி.*

*"மழை பொழிகிறது. மொட்டை மாடியில் நான்கைந்து பெரிய பாத்திரங்களை வைத்து வா" என வேலையாளிடம் சொல்ல, அவனும் மிக்க பணிவுடன் பாத்திரங்களை வைத்து விட்டு வந்தான். மழை நின்றபின் வீட்டு யஜமானி, நிறைய சுத்தமான மழைத் தண்ணீர் கிடைத்திருக்கும் என மொட்டை மாடிக்கு விரைந்து சென்று பார்த்தாள். சிறிதளவு தண்ணீர் கூட ஒரு பாத்திரத்திலும் இல்லை; ஏன்? எல்லாப் பாத்திரங்களும் கவிழ்த்தி வைக்கப் பட்டிருந்தன. பாத்திரங்களைத் திருப்பி மழையை நோக்கி வைத்திருந்தால் தானே தண்ணீர் கிடைக்கும்?*

*முயற்சியை வலியுறுத்தும் மேலும் சில பாடல்கள்:*

***103. சிந்தித்து அருள்படச் சிலந்திபோல் கட்டிச்***
***சிறையிட்டு உண்டனை அருணாசலா***

*சிலந்தி, ஒரு புழு அல்லது பூச்சியை உண்ண வேண்டுமானால் முதற்கண் சிலந்தியின் இரை அதன் வலையில் சிக்க வேண்டும். வலைக்கு வெளியேயுள்ள புழு பூச்சிகளை சிலந்தியால் உண்ண முடியாது.*

அதேபோன்று சாதகனும் தனது முயற்சியின் மூலம் குருவின் அருட்பார்வைக்குள் விழவேண்டும். அப்பேறு அருள் அவனைப் பூரணமாக விழுங்கி விடுகிறது.

ஸ்ரீஅக்ஷரமணமாலை, உள்ளது நாற்பது இவற்றிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட மேற்கண்ட பாடல்கள் திட்டவட்டமாக பக்தனின் சிறு முயற்சியை வலியுறுத்து கின்றன. சிறு முயற்சி இல்லையேல் பலன் இல்லை. ஓர் பிரபலமான வாசகம்: “என்னை நோக்கி நீ ஒரு அடி வந்தால் உன்னை நோக்கி நான் 10 அடிகள் வருகிறேன்” என்கிறார் பக்த வத்ஸலனான இறைவன்.

முயற்சியே இல்லாத மார்ஜார கிசோர நியாயம் இந்தத் தகுதியால் தோற்று விடுகிது. மற்றொரு நியாயம் மர்க்கடக் கிசோர நியாயம். இதில் குரங்குக்குட்டிதான், முழு நேரமும், முழுதும் தாயைக் கட்டிக்கொண்டு செல்ல வேண்டும். தாய் கவலையே படாது. பக்தி உண்டு. ஆனால் முழு முயற்சியும் பக்தனுடையதே. இந்த நியாயமும் சரணாகதிக்கு உகந்ததல்ல. ஏனெனில் ஒருவன் தன் முயற்சியால் நம்பிக்கை வைத்திருக்கிறேன். கார்ப்பண்யம் என்ற சரணாகதியுடன் ஒரு முக்கிய லக்ஷணம் இதில் இல்லை. வைணவத்தில் வேதாந்த தேசிகர் இந்த நியாயத்தைப் பின்பற்றினார்.

மேலும், மார்ஜார கிசோர நியாயமும் மர்க்கட கிசோர நியாயமும் இன்னுமொரு காரணத்தாலும் மறுபடியும் தோல்வி அடைகின்றன. அவ்விரண்டு கொள்கைகளிலும் தாயும் குட்டியும் எப்பொழுதும் இரண்டு பிராணிகளாகவே அதாவது “த்வைதமாகவே” இருக்கின்றன. “அத்வைதம்” என்பது இரண்டற்ற நிலை. இரண்டோ அதற்கு மேலோ இருப்பதெல்லாம் ஒன்று சேர்ந்து இரண்டறக் கலந்து உருத்தெரியாமல் எவ்விதத்திலும் ஒன்றாக மாறுவதே. பக்தன் பகவானால் விழுங்கப்பட்டு புசிக்கப்பட்டு, செரிக்கப் பட்டு பகவானுடன் ஒன்றி விடுவதே அவன் லட்சியம்.

*ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், ஓர் உப்பு பொம்மையின் உதாரணத்தைச் சொல்கிறார். உப்புபொம்மை சமுத்திரத்தின் ஆழத்தை அளக்க சமுத்திரத்தில் மூழ்கியதாம். அதன் நிலை என்ன ஆகும்? கரைந்து, கலந்து, ஒன்றாவது தானே.*

*முண்டக உபநிஷத்தில் ஓர் அழகான உதாரணம்:*

***யதா² நத்³ய: ஸ்யந்த³மானா: ஸமுத்³ரே***
***அஸ்தம் க³ச்ச²ந்தி நாமரூபே விஹாய ।***
***ததா² வித்³வான் நாமரூபாத்³ விமுக்த:***
***பராத்பரம் புருஷம் உபைதி தி³வ்யம் ॥***

***(முண்டக உபநிஷத், 2.8)***

*மலைகளிலும், நிலத்திலும், வெவ்வேறு பெயர்களுடனும், தோற்றங்களுடனும், பெருகி ஓடும் ஆறுகள், சமுத்திரத்தில் சங்கமமாகி, நாமரூபங்களை இழந்து, சமுத்திரமாகவே ஆகிவிடுகின்றன. அதேபோல், எப்பொழுது பக்தன் உள்ளத்தே உள்ள பொருளை உணர்கிறானோ, அப்பொழுது அவனது பெயரும் உருவமும் போய் விடுகின்றன. எஞ்சி நிற்பது பக்தனல்ல. சத், சித், ஆனந்தமான பிரும்மமே.*

*இரண்டல்ல, ஒன்றே*

*ஸ்ரீ ரமண பகவானின் அக்ஷரமணமாலையிலும், உள்ளது நாற்பதிலும் பல பாடல்களில் எங்ஙனம் பக்தனே பரமனுடன் கலந்து பரப் பிரும்மமாகிறான் என்ற அத்வைத சித்தாந்தம் தெளிவாகக் காணப்படுகிறது.*

*அக்ஷரமணமாலை பாடல் 16:*

***காந்தம் இரும்புபோல் கவர்ந்து எனைவிடாமல்***
***கலந்து என்னோடு இருப்பாய் அருணாசலா***

*காந்தத்துடன் இரும்பு ஒட்டிக் கொண்டால் இரும்பும் காந்தமாகி விடும். பின், முன்பிருந்த காந்தம், புதிதாக உண்டான காந்தம் என்ற வேறுபாடு இல்லை. எஞ்சி நிற்பது ஒரே காந்தமே.*

*அக்ஷரமணமாலை பாடல் 103*

***சிந்தித்து அருள்படச் சிலந்திபோல் கட்டிச்***
***சிறையிட்டு உண்டனை அருணாசலா***

*ஒரு பூச்சி, சிலந்தியின் வலையில் சிக்கிவிட்டால் சிலந்திக்கு அது உணவாகி விடும். பின் அங்குப் பூச்சி இல்லை. மிஞ்சி இருப்பது சிலந்தி ஒன்றே.*

*அக்ஷரமணமாலை பாடல் 92*

***லட்சியம் வைத்து அருள் அஸ்திரம் விட்டு எனைப்***
***பட்சித்தாய் பிராணனோடு அருணாசலா***

*அருணாசலம் தன்னைப் பிராணனோடு பட்சித்தபின் அசலமாய் நிற்பது அருணாசலம் ஒன்றுதானே.*

*அக்ஷரமணமாலை பாடல் 101*

***அம்புவில் ஆலிபோல் அன்புஉரு உனில்எனை***
***அன்பாக் கரைத்து அருள் அருணாசலா***

*அன்பே வடிவமான அருணாசலத்தில், அன்பாகக் கரைந்த பின் காட்சி தருவது அன்பு மலை ஒன்றே.*

*அக்ஷரமணமாலை பாடல் 82*

***மெய்யகத்தின் மனமென்மலர் அணையில்நாம்***
***மெய்கலந்திட அருள் அருணாசலா.***

*மெய்கலந்திட்டபின் அங்கு இருப்பது ஆத்மானுபவம் தானே.*

*உள்ளது நாற்பது அனுபந்தம் 38*

***தான் அன்றி யாருண்டு? தன்னை யார் என் சொலின் என்?***
***தான் தன்னை வாழ்த்துகினும் தாழ்த்துகினும் தான் என்ன?***
***தான் பிறர் என்று ஓராமல் தன் நிலையில் பேராமல்***
***தான் என்றும் நின்றிடவேதான்.***

*பிரம்மமே ஆன்மாவாக அனுபூதி ஏற்பட்டால்*

*அறிவே தன்மயமான அந்த ஆத்மாவே மிச்சம்.*

*அதுவே "தான்" எனப்படுவது. அதைத்தவிர*

*இரண்டாவது ஒன்றும் இல்லை.*

*ரமணாச்ரமத்தில் நடந்த நிகழ்வு. ஏதோ ஒரு மடத்தைச் சேர்ந்த அடியார்கள் சிலர் ரமண பக்தர்களிடம் கேட்டார்களாம். "உங்கள் ஆச்ரமத்தில் சம்பிரதாயங்கள், சடங்குகள் என்ன என்ன" என்று. பதிலுக்கு "உங்கள் மடத்தைப் பற்றிச் சொல்லுங்கள்" என்றவுடன் "நாங்கள் நாள்தோறும் பல ஆன்மிகச் சடங்குகள் செய்வோம். அவற்றின் பலனை எங்கள் குருவிற்குச் சமர்ப்பித்து விடுவோம்" என்றார்கள். "ஓகோ! அப்படியானால் முதலை வைத்துக்கொண்டு வட்டியைக் கொடுத்து விடுவீர்கள். அப்படித்தானே" என்று ஒருவர் சொன்னதைத் தற்செயலாக அங்கு வந்த முருகனார் ஸ்வாமிகள் கேட்டாராம். அவர் உடனே சொன்னது "பரவாயில்லையே. உங்கள் குரு வட்டியை மட்டும் எடுத்துக்கொண்டு முதலை விட்டு விடுகிறார். இங்கு எங்கள் ஸ்வாமி முதலையே முழுங்கி விடுகிறதே" என்று. இதன் தாத்பர்யம், ஸ்ரீ ரமண பகவான் பக்தி சிரத்தையோடு யார் தம்மிடம் அடைக்கலமாக வந்தாலும் அவரையே விழுங்கி விடுகிறார்; அதாவது அவனுக்கு பூரண அனுக்ரஹம் அளித்து ஆட்கொண்டு விடுகிறார். பிறகு அங்கு இருப்பது பக்தன் இல்லை. பகவான் ஒருவர்தான்.*

*பாதசேவை, மாலை அணிவித்தல் முதலியவற்றை அறவே அகற்றியவர் பகவான். காரணம், "அனைவரும் ஞான ஸ்வரூபிகளே" என்ற அவரது தீர்மானம். இந்த அத்வைதக் கோட்பாடை அவர் தீவிரமாகக் கடைப்பிடித்தார்.*

*அவரது உள்ளது நாற்பது அனுபந்தத்தில் (39) "அத்வைதம் என்றும் அகத்து உறுக*

*புத்திரனே, அத்துவிதம் மூவுலகத்து ஆகும்..."*

*அத்தகைய அத்வைதக் கொள்கை இல்லாத மார்ஜாரக் கிசோர நியாயம், சரணாகதிக்கு மார்க்கமாயிருக்கப் பூரண தகுதி உடைத்ததாயில்லை. பின், வேறு மார்க்கத்தைக்*

*காண்பிக்க வேண்டாமா? அருணாசல அக்ஷரமணமாலை பாடல் 103-இல் வரும் சிலந்தியின் உதாரணமே, ஒரு நியாயமாக எழுகிறது. பூச்சி (பதங்கம்) தன் சிறு முயற்சியால் வலையில் சிக்கி, சிலந்தியால் (ஊர்ணநாபி) உண்ணப் படுகிறது. பின் அங்குப் பூச்சி இல்லை. மிஞ்சி நிற்பது சிலந்தியே. இதுவே உண்மையான அத்வைத நிலை.*

***யதோ[2] ஊர்ணநாபி[4] ஹ்ருத[3]யாத்[3] ஊர்ணாம் சந்தத்ய வக்த்ரத:***
***தயா விஹ்ருத்ய பூய: தாம் க்[3]ரஸத்யேவம் மஹேஶ்வர:***
***(ஸ்ரீமத் பாகவதம், 11–9–21)***

*சிலந்தி எங்ஙனம் தன் உடலிலிருந்தே உண்டாகும் பொருளிலிருந்து வலையை நிர்மாணித்து, அதில் விளையாடிப் பின் அவ்வலையையே விழுங்கி விடுவதுபோல், மஹேஸ்வரன் பிரபஞ்சத்தைப் படைத்துக் காத்து உட்கொண்டு விடுகிறான்.*

*சிலந்தியும் பூச்சியும் பங்கு கொள்ளும் செயலை, ஊர்ணநாபி - பதங்க நியாயம் என்று கொள்ளலாம். இது எல்லா விதத்திலும் பொருத்தமானது. ஜீவன்தான் பதங்கம். மஹேசன்தான் ஊர்ணநாபி. ஜீவனை விழுங்கிக் கரைத்துத் தன்னுள் அடக்கியபின் மிஞ்சி நிற்பது மஹேசனே.*

*ஆகவே, ஒருவன் ஸகுண உபாஸனை மூலம், உள்ள உணர்வேயான உள்ள பொருளை, உள்ளத்தே உள்ளபடி உணர்ந்து அனுபவிக்க விரும்பினால், அவன் செய்ய வேண்டியதெல்லாம், மரண பவமில்லா மஹேசனை, ஊர்ணாநாபி - பதங்க நியாயத்தின்படி சரணம் அடைதலே. பின் அவன் அனுபவிப்பது,*

*அக விநாசமே*

*அருள் விலாசமே*

*ஆத்ம போதமே*

*ஆனந்த விகாசமே*

# ஸ்ரீ பகவானின் ''ஆன்ம வித்தையை விளக்கும் 'ஆழ் துயிலின்' அரிய தத்துவங்கள்''

***1. ஆழ் துயில்/சுஷுப்தி என்னும் நிலையின் தன்மை பற்றிய ஸ்ரீ பகவானின் விளக்க உரை/தெளிவுரை/ விரிவுரை:***

[*வச.1/19*] *விழிப்பு, கனவு, ஆழ்துயில் மூன்றிலுமுள்ள 'நான்' ஒன்றே. அது கேவல இருப்பு மாத்திரம்; அதில் நீயுமில்லை, நானுமில்லை, அவன், அது என்பனவும் இல்லை. சென்றகாலம், நிகழ்காலம், வருங்காலம் என்பனவும் இல்லை. அது தேச காலம் அற்றது, பாவனைக்கு எட்டாதது, அது ஒன்றே எதார்த்தமாய் உள்ளது.*

[*வச.1/19*] *கே: ஆத்மாவை சாக்ஷாத்கரிக்க பகவானுக்கு எவ்வளவு காலமாயிற்று?*

*ஸ்ரீ பக: உடம்பொன்று காணப்படுவதால் இக் கேள்வி எழுகிறது. அகந்தை உடம்புடன் சம்பந்தப்படுவதால்,*

---

*★ மிக மிக நுணுக்கமாகக் கிரஹித்துக் கொள்ள வேண்டிய விளக்கங்கள்) { } இதனுள் உள்ள குறுங்குறிப்பு ஸ்ரீ பகவானது அல்ல.*

*நூற்குறிப்பு விவரங்கள்:*

*வச. 1/2 - ஸ்ரீ பகவத் வசனாம்ருதம் பாகம் 1/2, பதிப்பு 2004/2000;*

*தே.மு - அனுதினமும் ஸ்ரீ பகவானுடன், பதிப்பு-2003; ரம.பொன் - ஸ்ரீ ரமண மகரிஷியின் பொன்மொழிகள், பதிப்பு-2004.*

இதுபோன்ற தோற்றங்களும் கேள்விகளும் உதிக்கின்றன. அகந்தை சூக்ஷ்ம சரீரமாம் மனத்துடன் சம்பந்திக்கும்போது சூக்ஷ்மப் பிரபஞ்சத்தைப் பார்க்கிறோம். கனவில் நடப்பது இதுவே. தூக்கத்திலோ திருசியம் (காட்சி) ஒன்றுமில்லை; அதனால் திருஷ்டா (காண்பான்) இல்லாது போய்விட்டானா? திருஷ்டா அங்கே இல்லாவிடில், தூங்கினோம் எனும் ஞாபகத்திற்கு இடமிராது. தூங்கினவன் யார்? தூக்கத்தின்போது தூக்கம் என்னும் எண்ணம் யாருக்குமில்லை; விழித்துக் கொண்டபின் நன்றாய்த் தூங்கியதாக ஞாபகம் உறுகிறோம். சொல்லிக் கொள்கிறோம். ஆகவே, விழிப்பு, கனவு, தூக்கம் மூன்றிலுமுள்ள "நான்" ஒன்றே. இம் மூன்று அவஸ்தையிலும் (நிலையிலும்) மாறாது இருக்கும் அடிப்படை உண்மை ஒன்றே.

[தே.மு. 318-319-15/6/46] மாலை சந்நிதிக்குள் நான் சென்றபோது பகவான், ''நாம் பார்ப்பதெல்லாம் மாறிக் கொண்டே இருக்கிறது. எப்போதும் மாறிக்கொண்டே யிருக்கும் இதற்கெல்லாம் ஆதாரமாக மூல காரணமாக ஏதோ ஒன்று மாறாததாக இருக்க வேண்டும்" என்றருளினார்கள்.

சுப்பராமய்யா: ''இவை அனைத்திற்கும் ஆதாரமா யிருப்பது, மாறாததாக இருக்க வேண்டும் என்று கற்பனை செய்வதற்கு என்ன நிரூபணம் இருக்கிறது?"

ஸ்ரீ பக: 'நான்' மாறாதது என்பது வெறும் எண்ணமோ கற்பனையோ அல்ல. அது எல்லோரும் உணர்ந்துள்ள ஓர் உண்மை. மாறிக் கொண்டேயிருக்கும் அனைத்துப் பொருள்களும் இல்லாத தூக்கத்தில் 'நான்' இருக்கிறது. அது கனவிலும், நனவிலும் இருக்கிறது. மற்றவை அனைத்தும் வருகின்றன, போகின்றன. ஆனால் 'நான்' மாற்றமற்று இருக்கிறது.

[வச. 1/1] கே: திருஷ்டியின் ஸ்வரூபம் என்ன?

*ஸ்ரீ பக:* நாம் எந்த ஸ்திதியில் இருக்கிறோமோ அப்படித்தான் இருக்கும் நம் திருஷ்டியும். அதாவது ஜாக்ரத் அவஸ்தையில் ஸ்தூல சரீரத்தோடு, ஸ்தூல நாம ரூபங்களைப் பார்க்கிறோம்; ஸ்வப்னத்தில் சூக்ஷ்ம சரீரத்துடன் பற்பல மனோமயக் கற்பனைகளைப் பார்க்கிறோம்; சுஷுப்தியில் (ஆழ்ந்த உறக்கத்தில்) உடம்பும் தெரிவதில்லை, மற்றவையும் தெரிவதில்லை. இவற்றைக் கடந்த நிலையில் பிரஹ்ம ஸ்வரூபமே நாம், எல்லாம் நாமே. நமக்கு அயல் ஒன்றுமில்லை என்று தெரிந்து கொள்கிறோம்.

[*வச.2/280-281*] *கே:* உலகும் உயிர்களும் நம் திருஷ்டியே என்று எப்படிப் புறக்கணிப்பது? சங்கீத மேதையாம் வாக்னரின் அற்புதக் கிருதிகள் நம்மைப் பரவசமாக்குகின்றன. அவரும் அவரது சங்கீதமும் நம் திருஷ்டியே என்று எப்படி புறக்கணிப்பது?

*ஸ்ரீபக:* ஆழ்ந்த உறக்கத்திலும் நீ இருக்கிறாய். ஆனால், அப்போது வாக்னரும் அவரது சங்கீதமும் இல்லை. ஏன்? விழிப்பில் நினைவுகள் இருக்கின்றன. நினைவுலகிலேயே வாக்னரும் பிறரும் இருக்கின்றனர். வாக்னரும் அவரது சங்கீதமும் உன் நினைப்புகளே நினைப்பை விட்டு அவற்றிற்கோர் இருப்புமில்லை.

[*வச. 1/230*] தூக்கத்திலுள்ளது அத்வைத நிலையே. ஜீவாத்ம பரமாத்ம பேதம் ஏதாவது அங்கே தோன்றுகிறதா? பேதம் அனைத்தையும் மறந்த நிலையே தூக்கம். அதுவே சுக நிலை. அவ்வானந்த நிலையில் அமர்வதற்காகவே, மெத்தை, தலையணை, கொசுவலை முதலியவற்றை எவ்வளவு கருத்துடன் ஒழுங்குபடுத்திக் கொள்கின்றோம்! இவ்வளவும் விழிப்பு நிலைமையின் கவலைகளில் இன்று விடுபடுவதற்காகவே, ஆயினும் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டால், புறத்துணைகள் பயனற்றுப் போகின்றன. இதனால் விளங்குவது என்ன? அறிவெனப்படும் அறியாமையினின்று விடுபடுவதற்கே முயற்சிகள்

அனைத்தும்; பிறகு அவற்றால் ஆகவேண்டியதொன்றும் இல்லை என்பதே.

[வச. 1/170] ஸ்ரீபக: தனதியலே ஆகிய நான் என்னும் ஆத்மா இதுவாகவோ அதுவாகவோ இருப்பதன்று. கேவல சன்மாத்திரமே நான். இருப்பே நாம். அஞ்ஞானமென்று யாதொன்றும் இல்லை. இது புரியவில்லை எனில் அவ்வறியாமை யாருக்கென்று பார்க்க வேண்டும். தூக்கத்தினின்று விழிக்கும்போதே அகந்தை தோன்றுகிறது. நான் இப்போது தூங்கிக் கொண்டிருக்கிறேன், இனி விழிக்கப் போகிறேன் அல்லது வெகு நேரம் தூங்கிக் கொண்டே இருக்கின்றேன் என்றெல்லாம் தூக்கத்தின்போது நமக்குத் தோன்றுவ தில்லை. விழித்த பிறகே நன்றாய்த் தூங்கினேன் என்று நினைக்கிறோம் - சொல்கிறோம். விழித்துக் கொண்டதாக நாம் நினைக்கும்போது தூங்கிக் கொண்டுதான் இருக்கிறோம். அத் தூக்கம் தெளிய, கேவல சன் மாத்திரமாம் நம்மை நாம் உணர வேண்டும். உடம்பு உணர்வோடு கலக்க வேண்டாம். உடலென்பது வெறும் நினைப்புப் பிண்டமே. ஞான நிலையில், எந்த நினைப்பு வந்தாலும் போனாலும் அது நம்மைச் சற்றும் தொடராது. தூங்கும்போது உடல் என்றோ உலகென்றோ எந் நினைப்புமில்லை, கவலையுமில்லை. அப்படியே எப்போதும் இருக்கலாமே!

[வச. 2/32] ஸ்ரீபக: உலகோ, அதன் துன்பங்களோ தூக்கத்தின்போது உனக்குத் தோன்றினவா? அவ்வாறே நீ உன் உண்மை நிலையில் நின்றால், உலகத் தோற்றமோ துன்பத் தோற்றமோ சற்றும் இராது. உண்முகப்பட்டு ஏகான்ம சொரூபனாய் நீ நின்றால், உலகத் தோற்றம் ஸத்தில்லா வெறும் நிழலே என்று உணர்வாய்.★

[வச. 2/66] நமது தினசரி அனுபவத்தைப் பார்ப்போம். தூங்கும்போது துன்பம் ஏதுமில்லை. அத் துன்பமற்ற நிலை இப்போதும் தொடர்ந்திருக்கிறது. எப்போதும்

*உள்ளது அதுவே. அதுவே சிவம் எனப்படும். சிவனுக்கு வடிவமொன்று உள்ளதா என்று கேட்குமுன், நமக்கே வடிவமுண்டா என்று பார்ப்போம். தூக்கத்திலும் நாமேயிருக்கிறோம், அப்போது எவ்வடிவுடன் இருக்கிறோம்? வடிவமொன்று இல்லாவிடினும் நாம் இல்லாது போகவில்லை. நாம் இப்போதும் அவ்வாறேதான் இருக்கிறோம். (பொய்யாம் தேகாத்ம பாவமே அதை இப்போது மறைக்கிறது). யதார்த்தத்தில் நமக்கே வடிவில்லை என்னும்கால், சிவனுக்கு வடிவம் ஏது? வடிவமற்றதோர் ஆனந்த மயமே சிவமெனப்படும். (சிவபெருமான் ஸம்ஸார மூர்த்தி அவர் முகம் குழந்தை போன்று சாந்தமாயிருக்குமா என்று கேட்டபோது இந்த விளக்கம் ஸ்ரீ பகவானால் தரப்பட்டது.)*

[*வச.* ***1/94***] *செத்தவர்கள் சந்தோஷமாகவே இருக்கிறார்கள். உபத்திரவப் பிண்டமாம் உடலை நீத்தவர் வருந்தார். செத்தவனைப் பற்றி மற்றவர்களே அழுகிறார்கள். தூங்குவதற்கு யாராவது பயப்படுகிறார்களா? பயப்படுவதில்லை என்பது மட்டுமல்ல; எல்லோரும் தூக்கத்தை விரும்புகிறார்கள். விழித்தெழுந்ததும் சுகமாய்த் தூங்கினேன் என்றும் சொல்கிறார்கள்.*

[*வச.* ***1/98***] *கே: அனுபவ நிலையில் அறிவு விளக்கமுண்டா?*

*ஸ்ரீ பக: தூக்கமே அறிவற்ற நிலை. அனுபவமென்பது அறிவு விளக்கம். ஆனால் உலகியலில் உள்ள காண்பான், காட்சிமயமான அறிவு விளக்கம் அல்ல அது. அகண்ட போதமே அது. அறிவு அல்லது ஞானம் என்பதன் வாச்யார்த்தம் (சொற்பொருள்) மனோ விருத்தி; லக்ஷியார்த்தம் (குறிப்புப் பொருள்) ஆன்ம ஸ்வரூப போதம்.*

[*வச.* ***1/122***] *தூங்கும்போது உடலும் அகந்தையும் தோன்றாவிடினும், நாம் இல்லாது போகவில்லை. இருந்து கொண்டுதான் இருக்கிறோம். விழித்துக்*

கொள்கிறோம், அப்போதும் அதே நாமே தான் இருக்கிறோம். உடல் உலகங்கள் தோன்றாமையும், தோன்றுவதுமே இவ்விரு நிலைகளுக்கும் உள்ள பேதம். உலகம் மனத்தோடு தோன்றி, மனத்தோடு ஒடுங்குகிறது. தோன்றி மறைவது நாமல்ல. மனம் தோன்றுவதற்கும், ஒடுங்குவதற்கும் இடமாய் இலகும் அதுவே நாம். இடையறாத சைதன்யமே நாம்.

[*வச. 1/158*] *கே: ஆழ்ந்த தூக்கத்தில் நான் ஏதோவொரு விதமான சமாதியிலிருப்பதாக நினைக்கின்றேன். அவ்வனுபவம் சரியானது தானா?*

*ஸ்ரீபக: விழிப்புற்ற நானே இவ்வாறு வினவுகிறது. தூங்கும் நான் அல்ல. நல்ல விழிப்புடன் தூங்குதலே சமாதியெனப்படும் (★). சமாதி அனுபவமுற்றார் எது பற்றியும் சம்சயமுறார். உண்மையில் அதுவே நமது இயல்பு நிலை, அவஸ்தை மூன்றிலும் இடையறாது ஒளிர்வது அஹம் ஸ்வரூபமாம். அது அவஸ்தைகளுக்கு உட்பட்டதல்ல. எவ் அவஸ்தையும் அதனுள் அடங்கும். எதற்கும் அதுவே ஆதாரம். ஆகவே விழிப்பு நிலையில் சமாதி அனுபவமுற்றால், தூங்கும்போதும் அதுவே தொடர்ந்து விளங்கும். அறிவு, அறியாமை என்னும் பாகுபாடு தோன்றுவது மனத்தின் எல்லையிலேயே. யதார்த்த ஸ்வரூபமோ அவை இரண்டும் அற்றதோர் அறிவு மயமாம்.*

[*வச. 1/136*] *மனத்தைக் கடந்த நிலையே சமாதி எனப்படும். அதை வாக்கால் எப்படி விளக்க முடியும். தூக்க நிலை அனுபவத்தையே இப்படியென்று உரைக்க முடியாதெனில் சமாதி அனுபவத்தை எப்படி விவரிப்பது?*

[*வச. 1/217*] *கே: ஸமாதி என்பதென்ன?*

*ஸ்ரீ பக: நம் யதார்த்த ஸ்திதியே ஸமாதி எனப்படும்.*

*கே: அவ்வாறாயின் ஸமாதி சித்திப்பதற்கு முயல்வதேன்?*

*ஸ்ரீ பக: முயல்வது யார்?*

*கே: எனக்குத் தெரியாது.*

*ஸ்ரீ பக: தெரியவில்லை என்பது தெரியும்போது, அது தெரியாமை ஆகாது. என்னை அறியேன், அல்லது என்னை நான் அறிவேன் என்று சொல்லும்போது அறிகின்ற நான், அறியப்படும் நான் என இரண்டு நான்களை ஒப்பியதாகிறது (★). 'உணர்வு அவ்வாறு பாகுபடாது. அது ஒன்றே என்பது சர்வ வேதாந்த சித்தாந்தம் ஆகும். நான் ஒருவனே என்பது யாவர்க்கும் அனுபவ சித்தம். அது ஒருபோதும் இரண்டாகப் பிரிபடாது.' தூங்கும்போது இருந்த நான் தான் இப்பொழுது விழித்த போதும் இருக்கிறேன்' என்பதே எல்லோரது அனுபவமும். அவ் அனுபவத்தை விட்டு விட்டு விழிப்பு நிலையிலே தோன்றும் காண்பானே நான் என்னும் விபரீத சிருஷ்டியாலேயே பேதமெல்லாம் உண்டாகிறது. காண்பான் வேறு, காணப்படுவது வேறு என்று மயங்கிக் குழம்புகிறோம். ஆயினும், எவ்வெந்த நிலைமையிலும் மாறாது நாமே இருக்கின்றோம் என்பது, நமது அனுபவத்தால் நன்கு விளங்குகிறது.*

*[வச. 2/59-61] கே: தாங்கள் கூறுவது எனக்குப் புரியவில்லை?*

*ஸ்ரீபக: நான் இருக்கின்றேன் என்பது புரியவில்லையா? அப்படியானால் இப்போது கேள்வி கேட்டுப் பேசுவது யார்?*

*கே: நான் தான். ஆனால் நான் எப்படியிருக்கிறேனோ என்னவோ எனக்குப் புரியவில்லை.*

*ஸ்ரீபக: இல்லை என்று சொன்னாற்கூட, அவ்வாறு மறுப்பவன் ஒருவன் இருக்க வேண்டும்.*

*கே: சரி நான் இருக்கிறேன், மேற்கொண்டு?*

*ஸ்ரீபக: நீ இருப்பதை எப்படி அறிகிறாய்?*

*கே: நான் பார்க்கிறேன், கேட்கிறேன், நினைக்கிறேன் ஆகவே நான் இருக்கிறேன்.*

*ஸ்ரீபக: இச்செய்கைகளால் உன் இருப்பை ஊகிக்கிறாயா? சரி. பார்த்தல், கேட்டல், நினைத்தல் இவை ஏதுமில்லாத தூக்கத்தில் நீ இல்லையோ?*

கே: *தூக்கத்தில் நான் இருந்தேனென்று சொல்ல முடியவில்லை!*

*ஸ்ரீபக: அப்படியானால் தூக்கத்தில் நீ இல்லாது போனாயா (இல்லையா?)*

கே: *தூக்கத்தின்போது நான் இருந்தேனோ இல்லையோ கடவுளுக்கே வெளிச்சம்!*

*ஸ்ரீபக: தூக்கத்திலிருந்து விழித்ததும், தூங்குவதற்கு முன்னும் நீ இருந்தது தெரிகிறதல்லவா?*

கே: *தூங்குவதற்கு முன்னும், தூங்கி எழுந்த பின்னும் என் இருப்பு எனக்குத் தெரிகிறது. தூங்கும்போது இருந்தேனோ இல்லையோ எனக்குத் தெரியவில்லை.*

*ஸ்ரீபக: விழித்ததும் தூங்கிக் கொண்டிருந்தேன் என்று சொல்கிறாய் அல்லவா? அது தூக்கத்தின்போது ஒன்றும் தெரியாது இருந்ததன் ஞாபகம் அல்லவா?*

கே: *இதெல்லாம் வெறும் ஊகமே. இதனால் பயன் யாது?*

*ஸ்ரீபக: அப்படியானால் இப் பிரச்சனைகளின் முடிவைக் கடவுளே கண்டு பிடித்துக் கொள்ளட்டும். தூக்கத்தின் போது ஒருவன் செத்துப் போவதாய் இருந்தால், அதைப் பற்றி ஒருவன் பயப்பட வேண்டும். அவ்வாறன்றி யாவருமே தூக்கத்தை மனமார விரும்புகின்றனர். அஃது ஒரு சுகமான நிலையாய் இருந்தால் அன்றி அவ்வாறு அதை யாவரும் விரும்பமாட்டார்.*

கே: *தூக்கத்தில் என்ன இன்பம் இருக்கிறது? உடல், மனம், கருவி கரணாதிகளின் களைப்பு நீங்குகிறது. அவ்வளவுதான்.*

*ஸ்ரீபக: தூக்கத்தின்போது களைப்பு நீங்குகிறவன் (★) ஒருவன் இருக்க வேண்டுமல்லவா?*

*கே: ஆம்*

*ஸ்ரீபக: சரி, ஆகவே நீ தூக்கத்தின்போது இருந்தாய், இப்போதும் இருக்கிறாய். தூக்கத்தின்போது கருவி, கரணாதிகளின் இயக்கம் இன்றிச் சுகமாய் இருந்தாய். இப்போது ஏன் அவ்வாறு சுகமாயில்லை?*

*கே. தூக்கத்தில் சுகமிருப்பதாக எப்படிச் சொல்லுவது?*

*ஸ்ரீ பக: அது மறுக்க முடியாத சகலானுபவமாயிற்றே! 'யாதும் தெரியாது சுகமாய்த் தூங்கினேன்' என்று எவரும் ஒப்புக்கொள்வது ஆயிற்றே!*

*கே. அது சரியாகத் தோன்றவில்லை. உறக்கத்தில் துன்ப உணர்வின்றி இருக்கின்றோமே அன்றி, இன்பம் என்று சொல்லக் கூடியது ஒன்றுமில்லை.*

*ஸ்ரீ பக: நமது இருப்பே ஆனந்த மயம். அதனாலேயே அதை மறைக்கின்ற எண்ணக் குழப்பம் அற்றுப் போகும் உறக்கத்தில் நமது இயல்பேயாம் ஆனந்தமாய் இருக்கிறோம். உறக்கத்தில் துக்க நீக்கம் இருக்கிறது என்பதற்கு துக்கம் ஒன்றும் இல்லை (★). விழிப்பு நிலையிலுள்ளதேகாத்மபுத்தியேஎல்லாக்குழப்பத்திற்கும் மூல காரணம் (★).*

*கே: எனது இயல்பே ஆனந்தமென்று எனக்கு விளங்க வில்லை. அவ் வனுபவத்தைப் பெற விரும்புகின்றேன்.*

*ஸ்ரீ பக: அனாத்மாவை ஆத்மாவாய்க் கருதும் தவற்றாலேயே இயல்பாம் ஆனந்தம் மறைபட்டாற் போலத் தோன்றுகிறது. அனாத்மாவும் ஆத்மாவுக்கு அன்னியமாய் இல்லை. எனினும் முதலில் அனாத்மாவை ஆத்மாவாய்க் கருதும் தேகாத்ம புத்தி ஒழிந்தால் அன்றி, நமது இயல்பேயாம் ஆனந்தத்தை உணர முடியாது.*

*(அருளுரை தொடரும்)*

# அடைக்கலச் சீடனை அகல விடாமை

## குஞ்சு சுவாமிகள்

மலையடிவாரத்தில் ஸ்ரீரமணாச்ரமம் இயங்க ஆரம்பித்து சிலவருடங்கள் சென்று, தண்டபாணி ஸ்வாமி ஆச்ரமத்தில் இருந்து கொண்டு சமையற்கட்டு வேலைகளை மேற்பார்த்து வந்தார். அப்போது அவர் தினமும் சட்னி, துவையல் என விதவிதமாகச் செய்வார். அவைகளை ஆட்டுரல் இட்டு அவர் அரைக்க, ஸ்ரீபகவான் தள்ளிக் கொடுப்பார். சில சமயங்களில் ஸ்ரீபகவான் அரைக்க அவர் தள்ளிக் கொடுப்பார். அந்தக் காலத்தில் ஆச்ரமத்தில் நிரந்தரமாகத் தங்கி இருந்தவர்கள் ஏழெட்டு பேர்கள்தான். ஆகையால் காய் நறுக்குவது, அரைப்பது போன்ற காரியங்களில் ஸ்ரீபகவான் சகஜமாக எங்களுடன் ஈடுபடுவார். தண்டபாணி ஸ்வாமி பிராமணராதலால் அரைக்கும் வேலைகளுக்கு எங்களை அனுமதிக்க மாட்டார். சேர்ந்தாற்போல் தினம் அரைத்ததில் ஸ்ரீபகவானுக்கு வலதுகை சுண்டு விரல் கொப்பளம் கண்டது. இதைக்கண்ட எங்களுக்கும், ராமகிருஷ்ண ஸ்வாமி முதலானோர்களுக்கும் மிக வேதனையாக இருந்தது. தண்டபாணி ஸ்வாமியிடம் விஷயத்தைச் சொல்ல தற்போது சட்னி, துவையல் முதலியன அரைக்கும் வேலை வேண்டாமெனக் கேட்டுக் கொண்டோம். அவர் அதை லக்ஷியம் செய்யவில்லை. நான் ஸ்ரீபகவானிடம் தனிமையில், ‘‘பகவானே தங்கள் கையில் இப்படிக் கொப்பளித்து இருக்கும்போது இனியும்

அரைக்கும் வேலையெல்லாம் செய்ய வேண்டாம், இது எங்களுக்கெல்லாம் பெரிய அபசாரமாகும். அப்படிச் செய்ததை நான் சாப்பிட மாட்டேன்'', என மிக வருந்திக் கூறினேன். மறுநாளும் தண்டபாணி ஸ்வாமி நிறைய புளித்தகீரையை வாங்கி ஆய்ந்து துவையல் அரைக்க ஏற்பாடு செய்தார். நாங்கள் யாரும் ஆய்வதற்குப் போகவில்லை. அன்றும் ஸ்ரீபகவான்தான் அரைத்தார்கள். சாப்பிடும்போது நான் மட்டும் துவையல் போட்டுக் கொள்ளவில்லை. இதை யாரோ ஸ்ரீபகவானிடம் சொல்விட்டார்கள். அடுத்த வேளை சாப்பாட்டின்போது பகவான் என்னைக் கூப்பிடச் சொன்னார்கள். நான் போனதும், ''என்ன ஓய்! நான் சாப்பிடலாமா?'' எனக் கேட்டார்கள். நான் ஒன்றும் புரியாமல் திகைத்தேன். ''ஆமாம், இவர்கள் சொல்வதையெல்லாம் நான் கேட்கவில்லை என்றால் சாப்பிடமாட்டார்கள். இவர்கள் உத்திரவுப்படிதானே நான் நடக்க வேண்டும். ஒவ்வொருவரும் இங்கு வரும்போது சாதுவாக வருவார்கள். நாள் செல்லச் செல்ல நம்மையே அதிகாரம் செய்ய ஆரம்பித்து, சாமி நாம் சொல்வதை கேட்க வேண்டுமென நினைக்கிறார்கள்,'' என்று கேலியாகச் சொன்னார்கள். என் மனம் மிகக் கலங்கி விட்டது. இதுபோல் இரண்டு மூன்று தினங்கள், ''நான் குளிக்கலாமா, சாப்பிடலாமா, வெளியில் செல்லலாமா'' எனக் கேட்க ஆரம்பித்தார்கள். அதற்குமேல் ஸ்ரீபகவானின் கேலி வார்த்தைகளைத் தாங்கிக் கொள்ள எனக்கு சக்தி இல்லை. ராமகிருஷ்ண ஸ்வாமியிடம் என் மனக்கஷ்டத்தைச் சொல்லி, என் மன ஆறுதலுக்காக சிலநாள் திருப்பதி போய் வருவதாகக்கூறி அன்று மாலை 6.30 மணி ரயில் போக முடிவு செய்து ஸ்ரீபகவானிடமும் உத்தரவு பெற்றேன்.

அன்று பிற்பகல் 3 மணிக்குமேல் ஸ்ரீபகவான் திடீரென்று பிரதக்ஷிணம் புறப்பட்டார்கள். ராமகிருஷ்ண ஸ்வாமி என்னிடம், நீங்கள் ரயிலுக்குப் போவதை எங்களுடன்



பிரதக்ஷிணமாக வந்து போகலாமே என்றார். நானும் யாத்திரைக்கு வேண்டிய வேஷ்டி துண்டுடன் எல்லோருடனும் பிரதக்ஷிணம் சென்றேன். அன்று ஸ்ரீபகவான் மிகமிக மெதுவாக நடக்கலானார்கள். அவர்களை முந்திக்கொண்டு போவது முறையல்ல என்பதால் என்னால் முன்னால் போக முடியவில்லை. குபேரலிங்கம் தாண்டி நடக்கும்போது ஆறரை மணி ரயில் போவதைப் பார்த்து ஸ்ரீபகவான் என்னிடம், ''அதோ உன் ரயில், போகுதுபார்! சீக்கிரம் பறந்து போ, போ'' என்று கூறிச் சிரித்தார்கள். இதைக் கேட்ட மற்றவர்களும் சிரித்து விட்டார்கள். நான் செயலற்று மௌனமானேன். ஆச்ரமம் வந்து சேர்ந்தோம். இரவு சாப்பாடானதும் தண்டபாணி ஸ்வாமி ஸ்ரீபகவானிடம், ''நீங்கள் துவையல் அரைக்கக்

கூடாது என்றானாம், அதற்காகத் தாங்கள், ‘இனி யாவும் அவன் உத்திரவுப்படிதான் நான் நடக்க வேண்டும்போல் இருக்கிறது’ என்றீர்களாம், அதனால்தான் மனவருத்தத் துடன் எங்காவது சென்று வந்தால் சமாதானமாக இருக்கும் என நினைத்து திருப்பதி புறப்பட்டானாம், பகவானுக்குக் கோபம் வரும்படி நடந்ததற்கு மனம் வருந்தி தங்களிடம் மன்னிப்பு கேட்கிறான்'' என்றார். உடனே ஸ்ரீபகவான், ''எனக்கு அவன்மேல் என்ன கோபம்? அவன் என்ன தப்பு செய்து விட்டான்? துவையல் அரைத்ததால் என் கையில் கொப்பளித்ததை பார்த்து, மனம் தாங்காமல், அவன் சாப்பிடவில்லை. இதில் கோபித்துக் கொள்ள என்ன இருக்கிறது? நான் கோபித்துக் கொண்டேனாம், இவன் திருப்பதிக்குப் புறப்பட்டானாம், மஹா புத்திசாலி! இவன் இங்கு ஆச்ரமச் சாப்பாட்டையே பிடிக்காமல் சாப்பிடுவான். குழம்பிலும், ரசத்திலும் தண்ணீரை விட்டுக் கொண்டு மருந்துபோல் விழுங்குவான். வெளியில் போனால் என்ன கிடைக்கும்? எப்படிச் சாப்பிடுவான்? அதல்லாமல் இவன் பூர்வாச்ரம குரு மலையாள ஸ்வாமி இவன் கையைப் பிடித்து என்னிடம் கொடுத்து, இவனைக் கைவிடாமல் காப்பாற்ற வேண்டுமென ஒப்படைத்து விட்டுப் போனார். நாளை அவர் வந்து என் சிஷ்யன் எங்கே என்று கேட்டால் நானல்லவா பதில் சொல்ல வேண்டும்? இவன் என்னவென்றால் திருப்பதி போகிறானாம் திருப்பதி!'' எனச் சிரித்துக் கொண்டே சொன்னதும் எனக்குச் சமாதானமும் சந்தோஷமும் ஏற்பட்டது. ''நாம் பகவானுக்குக் கைங்கரியம் செய்கிறோம், நாம்தான் பகவானைக் காப்பாற்றுகிறோம்'' எனும் அகங்காரத்தை நீக்குவதற்காகவே ஸ்ரீபகவான் நடத்திய நாடகமன்றோ இது! ஸ்ரீபகவானே என்னை முழுவதுமாக ஏற்று ஆட்கொண்ட பிறகு கலக்கத்திற்கும் கவலைக்கும் இடமேது?

# சுவர்மறை சோலை

## ஜா. ஜயராமன்

*83.* நற்குரு சானாய் சூபியும் [1]
பறைவன்: விடுதி பகைவன்பேச்சை.

*85.* மோனம் ஒன்றே போற்றி.
தீங்கும் துயரும் பேச வளரும்--
ஈங்கிது விட்டொழி வாய்!

*88.* நம்பிக்கை சந்தேகம் என்னும்
வம்பின் கரு மூலம்: - உன்
டம்பக் கபட உளம்.

*91.* பாதையில் கிளம்பும் தாமதமே - உன்
காதையாம் வழியின் நீட்சி !
அடிமை ஆயி(ன்) இராயனாம் ! - இப்
படியொன்றா(ல்) அவனிடை சேர்க்கும் !

*95.* அவனின் மூலப் பிராண சுகந்தம்
அடையின் மூகரும் புலமை கொள்வர்.

*97.* திட்டமாய்க் கேள்மின் இவ்வுண்மை
மட்டமாம் மானுடர்க்கல்ல
வண்ண நிறங்கள் எல்லாம் ஒன்றும்[2]
கிண்ணமாம் ஆதாரத்தில் !

---

[1] சூபி=sufi

[2] = ஒன்றுசேரும்

*கயிறின் வலிமை ஒழியும் அதனின்*
*வயிறின் அளவு குன்றின்.*

*(வேறு)* *(ரூபக நடை)*

*(சீருக்கு= 3முழு (அல்லது) 6 அரை மாத்திரை)*

*{11 22 33, 11 22 33 11 22 33, 11 22 33}*

*{தானானா, தானானா, தானானா, நீதானா}*

*2. 12 34 56, 12 34 56, 12 34 56, 11 22 33*

*{தனதனதன, தனதனதன, தனதத்தன, நீ தா னா}*

*103. ஊகமும் ஊனமும் எண்ணக் கிச்சிடி*[3]*,*
*தேகியாம் புத்தியின் நொண்டிக் கூத்து !*
*இவை இப்பூமியில் எங்கிருந் தாலும்*
*அவன் அங்(கு) இல்லை !*

*107. - அனைத்துமாம்*
*சத்திச் சொரூபமும் அத்தில் அடங்கும்*[4]*!*
*ஞாதுரு மானுடன்*[5] *சுட்டறிவும் நம்*
*நாதனின் சோலையின் நூதனச் செடியே!*

*111. மூல விலக்கணம் கழற விழைதல்*
*மூடன்தன் தாயின் தோற்றம் கூற*

---

[3] *112233 = 3 ஜோடியில் 6 அரைமாத்திரை= ஊகமும்(ம்) = எண்ணக்(க்) (க்)=கிச்சிடி(இஇ) = தேகியாம் புத்தியின்(ன்) = நொண்டிக் (க்க்) கூத்து (உஉஉ) = இவைஇப்(ப்ப்ப்) =பூமியில்(ல்) = எங்கிருந்(ந்) = தாலும்(ம்ம்) = அவனங்(ங்ங்) = இல்லை(இஇ)அ)=னைத்துமாம்*

[4] *123456 = சத்திச்(ச்ச்) = சொரூபமும் = அத்தில்(ல்ல்) = அடங்கும்(ம்) = ஞாதுரு(உ) = மானுடன்(ன்) =சுட்டறிவும் = நம்(ம்ம்ம்) = நாதனின் (ன்) = சோலையின்(ன்) = நூதனச்(ச்) = செடியே (எஎ)*

[5] *ஞாதுரு மானுடன்=அறிபவனாக இயங்கும் மனிதன். ஞாதுரு+ஞேயம்+ஞானம்=அறிவான்+அறிபொருள்+அறிவு+ முப்புடிகள்*

*விரும்பின் தோல்வி- யேஅதுபோல்*
*ஞாலத்தி(ல்) ஆவ(து) என்று(ம்) இலையே.*

*(வேறு)*
*(கண்ட நடை) (சீருக்கு 5 மாத்திரை)*
*{12345, 12345, 12345, 12345}*
*{தனதான, தனதான, தனதான, தானனா }*

*115. நரபுத்தி பாதையின் ரகசியம் நாட, - உன்*[6]
*பரமத்தியான நாட(ல்) அன்பி(ல்) மறையும் !*

*(வேறு) (சதுரச்ர நடை) (சீருக்கு 4 மாத்திரை)*[7]

*117. நிலையாய் ஒன்றும் ஆவ(து) இல்லை*
*அலையும் ஓசையும் செயலும் பேணின்.*
*119. தலையாம் மவுனப் பாதையில் இவைகள்*
*இலையாம் ! இனிய வாழ்வு நடத்தல்,*
*மௌனத்(து) ஆழ்ந்த இவனின் பேச்சாம் !*
*எழி(ன்) அப்பேச்(சு) அறியாமையினின்றாம்,*
*(ஸ்)தம்பிக்கின் தமசின்றாம் !*
*124. நன்றும் தீதும் மிக நன்றே*
*ஞானிக் கிவை ஒன்றே.*
*மேலோன் தருவது தீதின்றாமே,*
*ஆலாலம் போல் வரினும் !*
*128. தா(ள்) ஈசுரனின் காணும் வழியில்*
*சாளீசுரத் த்வைதம்*[8] *ஏனோ ?*
*ஒட்டக உருவம் பற்றி*
*மட்டரக வாதிப் பேன் ?*

---

[6] *1 2 3 4 5=நரபுத்தி=பாதையின் = ரகசியம் = நாடஉன் = பரமத்தி = யானநா =டலஅன்பில் =மறையும்(ம்)*

[7] *அடிக்குறிப்பு 1 & 2 (செய்யுள் வரிகள் 1-4) பார்க்க*

[8] *(சாளீசுரத் த்வைதம் = சுட்டறியும் பார்வைக்கேடு)*

*132. விதித்தது கொண்டு கிட !*
*பதைக்கின் ஹாதி யிடம் நீ நட !*
*இகமே நாடும் சுகமே(ய்) - மூட*
*ரகமே மன(ம்)மேவிட !*
*136. சொல்லின் மூல மண்டலத்தில்*
*நல்லது தீய(து) என்றில்லை*
*சுட்டறிவாம் நாமம் நின்னால்*
*நட்ட அறிவாம், நான், நீ கொண்டு !*
*140. எது நடக்கின் என்? உயர்வோ தாழ்வோ? -*
*மதுஒப்ப அவன் செயலாய் நீ பார்*
*சதியெல்லாம் நிழல் ஒப்பப்போம் !*
*(வேறு) (ரூபக நடை)*[9]
*143. உன்வாழ்க்கை? அவன்வாயின் கவண் தீனி !*
*அவன் விருந் தோர்விழிப் போர்விவா கம்*[10] *!*
*(வேறு) சதுரச்ர நடை (சீருக்கு 4 மாத்திரை)*
*145. உள்ளம் தமசால் துக்கப் படுமோ?*
*நல்லிருளே ஒளியின் கரு மூலம்.*
*147. கால நேமிப் பாயை விரித்தாய்*
*காலன் இறைவன் கட்டளை அடைவாய்*
*மாலாம்*[11] *அறிவைத் தாண்டி !*
*150. - உன்*
*சொற்பப் பார்வை இலா இருள் ! - ஒருகண்*
*அற்ப அறிவின் சேட்டை பகலில் !*



---

*9 அடிக்குறிப்பு = 21 & 22 (செய்யுள் வரிகள் 103-110) பார்க்க*

*10 உன் மின்னல் வாழ்க்கை காலனைக் கடந்த அவனுக்கு அற்பச்சோறு! அவன் விருந்தோ, ஒரு நிரந்தர இருப்புமறிவும் பிரியா விழிப்பாகும் விவாகமாம்!*

*11 மால் = அழுக்கு*



# செய்திகள்

ஆச்ரமத்தின் புதிய நூலகம் மற்றும் ஆடிட்டோரியம்

## *மடாலய நிர்மாண மகா கும்பாபிஷேகம்*

*தஞ்சாவூர் மாவட்டம் பூண்டி கிராமத்தில் வடவாற்றங்கரை அருகில் ஸ்ரீ ரமண மடாலய ஆச்ரமம் நூதன முறையில் 6-2-2012 திங்கட்கிழமையன்று புனர்வசு நன்னாளில் நிர்மாணிக்கப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. திரளான ரமண அன்பர்கள் கலந்து கொண்டார்கள்.*

## *ஸ்ரீவித்யா ஹோமம்*

*ஸ்ரீ ரமணாச்ரமத்தில், ஸ்ரீ வித்யா ஹோமம் கடந்த வருடங்களைப் போலவே இவ்வாண்டும் பங்குனி மாதம் முதல் வெள்ளியன்று, 16-3-2012 அன்று, காலை 7.00 மணி முதல் துவங்கி மாலை 4.00 மணியளவில் பூர்ணாஹுதியுடன் நிறைவு பெற்றது. கலசதீர்த்தங்கள் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு மாத்ருபூதேச்ரவர் சந்நிதியில் அபிஷேகம் செய்து தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பக்தர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு திரிபுரசுந்தரி அம்பாளின் அருளைப் பெற்றனர்.*

## யோகவாசிஷ்ட சாரம், இராமாயணம் - பிரவசனம்

*திரு. நொச்சூர் ஸ்ரீ வேங்கடராமன் அவர்கள் இம்முறை யோகவாசிஷ்டசாரம்மற்றும்இராமாயணபிரவசனம்நிகழ்த்தினார். 2-4-2012 அன்று தொடங்கி 11-4-2012 வரை பிரவசனங்கள் நிகழ்த்தினார். காலையில் ஸ்ரீ ரமணாச்ரம கிரந்தாலய அரங்கத்தில் யோகவாசிஷ்ட சார பிரவசனமும் மற்றும் கிரிவலப் பாதையிலுள்ள காஞ்சி சங்கர மடத்தில் மாலை இராமாயண பிரவசனமும் நடந்தது. ரமண அன்பர்களும் பக்தர்களும் உபன்யாசத்தில் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.*

## பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 62-ஆவது ஆராதனை

### ஸ்ரீ ரமணாச்ரமம், திருவண்ணாமலை

### 18-4-2012

*பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 62-ஆவது ஆராதனை இவ்வாண்டும் ஏப்ரல் 18-ஆம் தேதி ஸ்ரீ ரமணாச்ரமத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது. ஆராதனை விழா நிகழ்ச்சித் தொகுப்பு எமது அடுத்த இதழில் வெளிவரும்.*

*இவ்விழா மதுரை ரமண மந்திரம் மற்றும் திருச்சுழி சுந்தர மந்திரத்திலும் கொண்டாடப்படுகிறது.*

### ஸ்ரீ அருணாசல அக்ஷரமணமாலை சேவை மையம், பொள்ளாச்சி

*வழக்கம்போல் இவ்வாண்டும் ஸ்ரீ பகவானது ஆராதனை விழா 14-4-2012 அன்று காலை 8.00 மணி முதல் கோட்டூர் மலையாண்டிப்பட்டணம், ஸ்ரீ ராமர் கோயிலில் கொண்டாடப்பட உள்ளது. ஸ்ரீஅருணாசல அக்ஷரமணமாலை மற்றும் ரமண பக்திப் பாடல்களுடன், சொற்பொழிவுகளும் நடைபெற உள்ளது.*

### முருகனார் மந்திரம், இராமநாதபுரம்

*18-4-2012 அன்று மாலை முருகனார் மந்திரத்தில் ஆராதனை விழா மாலை 6.00 மணி முதல் 8.00 மணிவரை நடைபெறும்.*

*சிறப்பு நிகழ்வுகளாக திரு. ஞானானந்தா, சாரதா குடில், அழகன்குளம் அவர்களது சொற்பொழிவு மற்றும் அக்ஷரமண மாலை பாராயணம் நடைபெற உள்ளது.*

**ரமணாலயம், குரோம்பேட்டை**

*18-4-2012 அன்று பகவானது ஆராதனை விழா காலை 9.00 மணி முதல் 12.00 மணிவரை சிறப்பாகக் கொண்டாடப் பட உள்ளது. வேதபாராயணம், திரு. சத்குருநாத ஓதுவார், மயிலை கபாலீச்வரர் கோயில், அவர்களின் ரமண சந்நிதிமுறை ஓதுதல் மற்றும் அஷ்டோத்தர பூஜை பாராயணங்களுடன் நடைபெற உள்ளது.*

*செய்திகளில் நிகழ்வுகள் இடம்பெற ரமண மையங்கள் தங்களது அழைப்பிதழ் மற்றும் நிகழ்ச்சித் தொகுப்புகளை மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது அஞ்சல் வழியாகவோ ரமணோதயத்திற்கு அனுப்பி வைத்தால் பிரசுரிக்க ஏதுவாக அமையும்.*

## நொச்சூர் ஸ்ரீ வேங்கடராமன் - பிரவசனம்

## நாரத கான சபா, டி.டி.கே. ரோடு, ஆழ்வார்ப்பேட்டை

*நொச்சூர் ஸ்ரீ வேங்கடராமன் அவர்களின் பிரவசனம் சென்னை மாநகரில் நாரத கான சபா, டி.டி.கே. ரோடு, ஆழ்வார்ப்பேட்டையில் கீழ்க்கண்ட நாட்களில் நடைபெற உள்ளது.*

*பகவான் ரமணரின் நான் யார்?*

*22 ஜுலை ஞாயிற்றுக்கிழமை முதல் 28 ஜுலை சனிக்கிழமை வரை காலை 7.00 மணி முதல் 8.00 வரை*


*பகவத் தரிசனம் - தொடர் 7*

*21 ஜுலை சனிக்கிழமை முதல் 27 ஜுலை வெள்ளிக்கிழமை வரை மாலை 6.30 முதல் 8.30 வரை*

*மேற்கண்ட நாட்களில் தினசரி மாலை 6.00 மணியளவில் 'குருபக்தி தரங்கிணி' கூட்டுப் பாராயணம் நடைபெறும்.*

## *திரு. சந்திரசேகர் எனும் ஓர் ரமண அடியார்*

*ஆகஸ்டு மாதம் 15-ஆம் தேதி 1937-இல் பிறந்த திரு. சந்திரசேகர், தலைவர், ரமண கேந்திரம், பாண்டிச்சேரி அவர்கள் தமது 75-ஆவது வயதில் 26-1-2012 அன்று பாண்டிச்சேரியில் ஸ்ரீ ரமண பதமடைந்தார்.*



*பகவான் பூதவுடலுடன் இருக்கும்போதே இவர் தனது தாயாருடன் கிரிப்பிரதக்ஷிணம் செய்துள்ளார். மேலும் பகவான் மகாசமாதி அடைந்த அன்று வானில் தோன்றிய ஒளியினை இவரும், இவரது குடும்பத்தினரும் காணும் பாக்கியம் அடைந்துள்ளனர்.*

*முருகனாரது மனைவி மீனாட்சி அம்மாள் அவர்கள் சென்னையில் இவர்களது இல்லத்திற்குச் செல்லும் பொழுதெல்லாம் அவர்களுக்கான வாழ்வாதார வசதிகளை இவரது குடும்பத்தினர் செய்து கொடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*1992-இல் ரமணாச்ரமத்திற்கு அடிக்கடி வரத் தொடங்கிய பின் பகவான் ஸ்ரீ ரமணமகரிஷி பக்த சேவாச்ரமம் (பிரும்மதேசம்) என்றதாக - ரமணாச்ரமத்தின் கிளை என்பதற்கொப்பாக - தனது இல்லத்தை அர்ப்பணித்து விட்டார். பிற்காலத்தில் புதுவை ரமண கேந்திரமாக மாற்றி அங்கு ரமண திருக்கோயிலும் அமைத்தார்.*

*ஒவ்வொரு ஆண்டும் ஆச்ரமவாசிகளுக்கு பருவ மாற்றங்களுக்குத் தக்கவாறு ஆடைகள், குடை மற்றும் போர்வை விரிப்புகள் என வழங்குவது இவரது வழக்கம்.*

*புதுவை மருத்துவமனைக்கு, சிகிச்சைக்குச் செல்லும் ரமண அன்பர்களுக்கு சேவை செய்வதில் மிகவும் ஆர்வம் காட்டினார்.*

*அவர்களுக்கு அங்குத் தங்குமிடம், உணவு மற்றும் போக்குவரத்து வசதிகளையும் கைங்கரியமாகச் செய்தார்.*

*ஸ்ரீமதி. டி.ஆர். கனகம்மாள் நிகழ்த்திய ரமண சத்சங்கங்களை ஒலிநாடாவில் பதிவு செய்ததை பக்தர்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கும் தொண்டினை ஆர்வத்துடன் செய்தார்.*

*2004-இல் ஆச்ரமத்தின் ரதயாத்திரைக்கு முன்னோடியாக புதுவையில், முதல்வர் திரு. ரங்கசாமி அவர்கள் தலைமையில் ரமண ரத யாத்திரையை புதுவை மாநிலம் முழுவதும் நடத்தி பகவானது அக்ஷரமணமாலையை அனைவரும் அறிந்து கொள்வதற்கு வழிவகுத்தார்.*

*அன்னாரைப் பிரிந்து வாடும் குடும்பத்தார் மற்றும் ரமண அன்பர்களுக்கு ஆறுதல் அளிக்குமாறு பகவான் ரமணரை ரமணோதயம் பிரார்த்தித்துக் கொள்கிறது.*

## ரா. கணபதி

*தமிழகத்தின் முதுபெரும் ஆன்மிக எழுத்தாளரான பெரியவர் ரா.கணபதி அவர்கள், சென்னையில் பிப்ரவரி-20 திங்கள்கிழமை மாலை 7.30 மணி அளவில் இறைவனடி சேர்ந்தார்.*



*ரா.கணபதி அவர்கள் ஒரு சகாப்தம். பெரும் தத்துவஞானி, ஆன்ம சாதகர், பக்தர். தனது ஆன்மிக ஈடுபாட்டினாலும், எழுத்துப் பணி மீதிருந்த தாகத்தினாலும் திருமணமே செய்து கொள்ளாமல் நைஷ்டிக பிரம்மசாரியாக வாழ்க்கை நடத்தியவர்.*

*கல்கி இதழில் அவர் எழுதிய தொடர் அறிவுக்கனலே அருட் புனலே ஒரு தலைமுறையை ராமகிருஷ்ண - விவேகானந்த*

*இயக்கத்துக்குக் கொண்டு வந்துள்ளது. தூய அன்னை சாரதா தேவி குறித்து அவர் எழுதிய அம்மா என்ற படைப்பு அன்னையை தமிழகத் தாய்மார்களுக்கும், சகோதரிகளுக்கும் அருகே கொண்டு வந்தது.*

*ரா.கணபதி காஞ்சி பரமாசாரியார் சந்திரசேகரேந்திர சரஸ்வதி அவர்களின் பரம பக்தர். தெய்வத்தின் குரல் அவரால் தொகுக்கப்பட்ட காஞ்சி சந்திரசேகரேந்திர சரஸ்வதி அவர்களின் உபந்நியாசங்கள், விளக்கங்கள் மாபெரும் ஒரு முயற்சி.*

*ஸ்ரீ ரமண மகரிஷியின் வாழ்க்கைச் சரிதத்தையும் ரா.கணபதி 'ஸ்ரீ ரமண மணம்'ஆக அர்ப்பணிப்பிலும் பக்தியிலும் தோய்ந்து எழுதியுள்ளார்.*

*சத்திய சாய் பாபாவின் வாழ்க்கையை ரா.கணபதி அவர்கள் ஸ்வாமி என எழுதியது பாபா பக்தர்களால் இன்றும் ஒரு திவ்ய சரிதமாகவே கருதப்படுகிறது.*

*பழம்பெரும் பௌராணிக மரபின் இறுதி ஒளிவிளக்காக வாழ்ந்த அவர் சிவபெருமான் மீது பெரும் பக்தி கொண்டவர். அவரது வாழ்க்கை மஹா சிவராத்திரி அன்று முடிவடைந்தது ஒரு அற்புத பொருத்தம். சிவராத்திரி தினத்தில் சிவநாமம் கூறியபடி அவர் உயிர் பிரிந்தது ஆச்சரியம் என்றனர் உடன் இருந்த அன்பர்கள்.*

*இவர் பரமாசாரியாரிடம் தனது குரு ரமணரின் அருளால் தனது எழுத்து நிற்கவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டது மிகவும் சிந்திக்கப்பட வேண்டிய ஒன்று.*

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் – 2012

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மே | 5 | சனி | பகல் 12.53 | 6 | ஞாயிறு | காலை 9.05 |
| ஜூன் | 3 | ஞாயிறு | இரவு 8.17 | 4 | திங்கள் | மாலை 4.41 |
| ஜூலை | 3 | செவ்வாய் | காலை 3.21 | 4 | புதன் | இரவு 12.21 |
| ஆகஸ்டு | 1 | புதன் | காலை 10.58 | 2 | வியாழன் | காலை 8.57 |

## ரமணோதயம் காப்பு நிதி தொடரும் நன்கொடையாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| திரு | S. | கணேசன், நங்கநல்லூர், சென்னை | 2500 |
| திரு | V. | ராமகிருஷ்ணன் | 2150 |
| திரு | V. | சுந்தரரமணன், சென்னை 61 | 2000 |
| திரு | A.N. | செண்பகமூர்த்தி, சிவகாசி | 2000 |
| திரு | J. | நடராஜ் மணிதேசிகர், சிதம்பரம் | 1000 |
| திரு | C.S. | முருகன், பெங்களூர் | 1000 |
| திரு | M.S. | சேஷாத்ரி, குரோம்பேட்டை | 1000 |
| திரு | T. | சுப்ரமணியன் (சுகன்யா), செகந்திராபாத் | 1000 |
| திரு | | பூவில் உடையார், சென்னை 44 | 1000 |
| ஸ்ரீமதி | R. | பானுமதி, திருவண்ணாமலை | 1000 |
| திரு | B. | பராங்குசம், ஸ்ரீரங்கம் | 1000 |
| திரு | B.K. | வெங்கடராமன், சென்னை 41 | 1000 |
| திரு | N.S. | சங்கர், மும்பை | 526 |
| ஸ்ரீமதி | | சாவித்திரி ராஜகோபால், சென்னை 28 | 500 |

## ரமணோதயம்

Voluntary Services

| | |
|---|---|
| K. சுரேஷ் ஜானகிராமன் | 9444127770 |
| ராஜேஷ் M.S. | 9840075778 |
| வஸந்தா ராகவன் | 9445432335 |

# ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை

# பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி

## 62-ஆவது ஆராதனை விழா நாட்கள்

புதன்கிழமை, ஏப்ரல் 18, 2012

இடம்: 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர்

***காலை***

| | | |
|---|---|---|
| 7.00 | a.m. | *மஹன்யாசம், ஏகாதச ருத்ர ஜபம்*<br>*வேதபாராயணம்* |
| 10.00 | | *ஸ்ரீ ரமணாச்ரம சஹஸ்ரநாமம்* |
| 10.45 | | *தமிழ்ப் பாராயணம்*<br>***உள்ளது நாற்பது, அக்ஷரமணமாலை*** |
| 12.15 | p.m. | *அன்னதானம், தீபாராதனை* |

***மாலை***

| | | |
|---|---|---|
| 4.30 | p.m. | *பிரதோஷ பூஜை* |
| 5.30 | | *ஹரிகதா*<br>***ஸ்ரீமதி சியாமளா ராமசந்திரன்*** |
| 6.45 | | *மயிலை மாடவீதிகளில் ஸ்ரீபகவான்*<br>*திருவுருவப்படம் வீதியுலா* |
| 7.15 | | *அக்ஷரமணமாலை - பாராயணம்* |
| 8.48 | | ***ஆன்மாவாம் அருணாசலனோடு***<br>***அண்ணல் ரமணர் ஒடுங்கிய தருணம்*** |

# பகவானது வாழ்க்கை மற்றும் உபதேசங்கள் பற்றிய கருத்தரங்கம்

**ஞாயிறு, ஏப்ரல் 22, 2012**

**இடம்: தத்வலோகா ஆடிட்டோரியம்**
*76, எல்டாம்ஸ் ரோடு, தேனாம்பேட்டை, சென்னை 18*

## நிகழ்ச்சி நிரல்

### மதியம்

| | | |
|---|---|---|
| 2.00 | p.m. | வேதபாராயணம் |
| 3.00 | | *ரமண பக்திப் பாடல்கள்*<br>*பாடுபவர்:* ***ஸ்ரீமதி சுஜாதா சீதாராமன் ஸ்ரீமதி தேவி ஸ்ரீராம், ஆர்யாம்பா*** |
| 3.35 | | *விழாத்தொகுப்பு:* ***ஸ்ரீமதி வசந்தா ராகவன்***<br>*துவக்கம் & தலைமையுரை:*<br>**திரு. K. நட்ராஜ், I.P.S. Chairman TNPSC** |

### மாலை

| | | |
|---|---|---|
| 4.15 | p.m. | ***''தத்துவ முடிவாய் நின்றோன்''***<br>*சொற்பொழிவு:* **Dr.S. ராம்மோஹன்,**<br>*ஆசிரியர், ரமணோதயம்* |
| 5.00 | | *தேநீர் இடைவேளை* |
| 5.30 | | *சிறப்புரை:* ***சுவாமி விமூர்த்தானந்தா***<br>*ஆசிரியர்: ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்*<br>*ஸ்ரீராமகிருஷ்ண மடம்* |
| 6.15 | | ***''ரமணரின் வாழ்வும் வாக்கும்''***<br>*சொற்பொழிவு:* ***திருப்பூர் கிருஷ்ணன்***<br>*ஆசிரியர்: அமுதசுரபி* |
| 7.00 | | *நன்றியுரை:* ***ஸ்ரீமதி வஸந்தா ராகவன்*** |

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| **மைலாப்பூர்** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | .......... | 24611397 |
| **சூளைமேடு** திரு V. ரமணன் | .......... | 23612731 |
| **கிழக்கு தாம்பரம்** திரு M.A. ராமசாமி | .......... | 9790873138 |
| **நங்கநல்லூர்** திரு S. இராமமூர்த்தி | .......... | 22244667 |
| **கூடுவாஞ்சேரி** திரு R. மாதவன் | .......... | 9940453553 |
| **மாம்பலம்** திரு M.K. வைத்தியநாதன் | .......... | 23716495 |
| **பெசன்ட் நகர், அடையார்** திரு P. பாலசுப்பிரமணியன் | .......... | 24915881 |
| **விருகம்பாக்கம்** திருமதி கௌசல்யா | .......... | 24790635 |
| குரோம்பேட்டை, *ரமணாலயம்* | .......... | 9444261296 |
| **கொளத்தூர்** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | .......... | 9884355454 |
| **அண்ணாநகர்** U.V. பானு | .......... | 26287809 |
| **புதுச்சேரி** ரமண கேந்திரம் | .......... | 0413-2272141 |
| **மதுரை** சோமசுந்தரம் | .......... | 04522348157/2346102 |
| **இராமநாதபுரம்** சிரஞ்சீவி | .......... | 9360047936 |
| **திருச்சுழி** ஹாலாஸ்ய பட்டர் | .......... | 9442004615 |
| **பொள்ளாச்சி** பாலசுப்பிரமணியம் | .......... | 9965622878 |
| **ஒட்டன்சத்திரம்** வடமலைக்கண்ணன் | .......... | 9842912474 |
| **பழனி** என். சோமசுந்தரம் | .......... | 9942327770 |
| **சேலம்** குப்புசாமி | .......... | 0427-2295460 |
| **வந்தவாசி** டாக்டர் ரவி | .......... | 9787180757 |
| **மடம்** சுந்தரமூர்த்தி | .......... | 9942264556 |

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.

# ஓர் அன்பு வேண்டுகோள்

ரமணோதயம் வாசக அன்பர்களே!

ரமணோதயம் கடந்த பத்து ஆண்டுகளாக பொருளாதார தளர்வுகளுக்கிடையிலும் தனது சேவையில் எவ்வித சோர்வுமின்றி ரமண அன்பர்களுக்குச் சேவை செய்வதையே இலட்சியமாகக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருவது சொல்லித் தெரிவதில்லை. தனது பதினோறாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த நல்வேளையில் இதன் நிர்வாகம் ரமண அன்பர்கள் முன் வைக்க வேண்டிய அன்பு வேண்டுகோள் ஒன்றுள்ளது. இதுகாறும் இதனைப் பேணி வளர்த்த பெருமையனைத்தும் ரமணோதய வாசகர்களையே சாரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இனியும் ரமணோதயம் தொடர்ந்து பொருளாதாரத் தளர்வின்றி தனது பணியைத் தொடர வேண்டுமெனில் அதற்கான வைப்பு நிதி மிகவும் வலுவான நிலையில் வைக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது. தொடர்ந்து எவ்விதப் பொருளாதாரத் தடங்கலுமில்லாமல் இதன் பணி தொடர குறைந்தபட்சம் ரூபாய் பத்து இலட்சம் வைப்பு நிதி உருவாக்கப் பட வேண்டும். இதற்கு பகவானைப் பிரார்த்திப்பதுடன் உங்களைத்தான் இப்பொருளுதவியை அளிக்க வேண்டும் என வேண்டுகிறோம். இந்த வைப்புத் தொகையின் கணக்கில் பொருளுதவி செய்ய தாங்கள் ஆயிரம் மற்றும் அதன் மடங்குகளாக பணமாகவோ அல்லது காசோலையாகவோ “Ramanodhayam” என்னும் கணக்கிற்கு செலுத்த வேண்டுகிறோம். இத்தொகை அளிப்போருக்கு S80G பிரிவின் கீழ் வருமான வரி விலக்கு உண்டு.

என்றும் பகவான் பணியில்,
ரமண கேந்திரா டிரஸ்ட்
சென்னை



## ஸ்ரீ ரமணாச்ரமத்தில் ஸ்ரீவித்யா ஹோமம்

